மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை
# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 18 இதழ் / Issue 11, 12 நவ, டிச / Nov, Dec 2020

## சமாதானத்தின் மணியொலி எங்கும் ஒலிக்கட்டும்!

செய்தி பக்கம்-12



"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்... உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக"

[யோவா.14:27]

Let the WORD OF CHRIST dwell in you richly in all wisdom, Col. 3:16

# Word of Christ Calendars - 2021

✆ 044-26613242 / 42640111 info@wordofchrist.org www.wordofchrist.org
7904828464 https://www.facebook.com/WordOfChristPublishing/




17.5"x3.8"

Available in :
ENGLISH, TAMIL
HINDI, TELUGU,
KANNADA, MARATHI
Size : 18x25 3 Sheet Calendar
130 GSM Foreign Art Paper




17.5"x3.5"

Available in :
ENGLISH, TAMIL
Size : 18x25 3 Sheet Calendar
130 GSM Foreign Art Paper




17.5"x3"

TAMIL / ENGLISH
PARALLEL CALENDAR
Size : 18"x25" 3 Sheet Calendar
130 GSM Foreign Art Paper




Available in :
TAMIL, ENGLISH, MALAYALAM
Size : 18"x25" - 3 Sheet Calendar
130 GSM Foreign Art Paper




14.5"x3.5

Available in :
TAMIL
Size : 15x20 3 Sheet Calendar
130 GSM Foreign Art Paper




14.5x3

Available in :
TAMIL
Size : 15x20 3 Sheet Calendar
130 GSM Foreign Art Paper

## OUR OTHER SEASONAL PRODUCTS

DESK CALENDAR



Available in
Tamil, English, Hindi



Available in
Tamil, English, Hindi




2021 DIARY WITH GOLDEN BIBLE VERSES




If you want your Church Address & Programme in the calendar, we will print the same at an extra cost.

**PLACE YOUR ORDERS @ OUR SERVICE CENTRES**



**மலர் - 18 நவ, டிச - 2020 இதழ் - 11,12**

**பொருளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 3 |
| 2. | இரக்கமும் கிருபையுமுள்ள தேவன் | 6 |
| 3. | நீ இன்னும் சொந்த வீட்டிற்கு..... | 10 |
| 4. | சமாதானத்தின் மணியொலி.... | 12 |
| 5. | கசப்பான வேரைப் பிடுங்கி எடுங்கள் | 17 |
| 6. | மரணத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் | 19 |
| 7. | சீர்கேடடைந்த உலகிற்கு.... | 20 |
| 8. | சிறிய கடிதம் - பெரிய செய்தி | 23 |
| 9. | கிறிஸ்தியானின் மோட்ச.....(பாகம்-13 ) | 27 |
| 10. | செய்திகள்.... | 12 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940
Website : www.wordofchrist.org

**வேர்ட் ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
D.No.23-B, “**தை கிரேஸ்**”
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

**உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும்...என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்” (வெளி.2:13)**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகள்

முழு உலகமும் கொரோனா கொள்ளை நோய்ப் பாதிப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கிற ஒரு கொடிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிற கர்த்தருடைய கண்களிலிருந்து நமக்கு கிருபை கிடைத்துக் கொண்டிருக்கிறபடியால் நாம் பிழைத்திருக்கிறோம். கிருபையை மாத்திரம் எந்தச் சூழ்நிலையிலும் இழந்துவிடாதபடி எச்சரிக்கையாயிருப்போம். கர்த்தர் தம்முடைய முகத்தை நம்மேல் பிரகாசிக்கப்பண்ணி நம்மேல் கிருபையாய் இருக்கக்கடவர்.

தலைப்பு வசனத்தில் பெர்கமு சபைக்கு உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து அச்சபையின் தூதனுக்கு எழுதும்படி யோவானுக்குச் சொன்ன காரியத்தின் ஒரு பகுதியை வாசிக்கிறோம். பெர்கமு சின்ன ஆசியாவிலுள்ள ஒரு மாநகரம். பெர்கமு (Pergamos) என்ற கிரேக்கச் சொல்லுக்கு “விவாகமானவர்” (Married) என்று அர்த்தம். ஆகவே பெர்கமு சபை கிறிஸ்து இயேசுவுக்கு விவாகம்

பண்ணப்பட்ட சபை என்று அர்த்தம் கொள்ளலாம். அப்படிப்பட்ட சபை "சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் குடியிருக்கிறது" என்றால், அந்தச் சூழ்நிலையின் மத்தியிலும் அவருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டு, அவரைப் பற்றும் விசுவாசத்தை மறுதலிக்காமல் உறுதியாக நிற்கிறது என்றால் அது ஆச்சரியமான காரியமே. அதற்கும் மேலாக அந்நகரில் இயேசு கிறிஸ்துவுக்காக உத்தம சாட்சியாக வாழ்ந்ததின் காரணமாக அந்திப்பா என்பவன் கொடூரமாகக் கொல்லப்பட்ட சூழ்நிலையிலும் அவர்கள் விசுவாசத்தை அசைவில்லாது காத்துக் கொண்டார்கள் என்று காண்கிறோம்.

பெர்கமு சபை சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடம் என்று சொல்லப்பட்டிருப்பதற்குச் சில காரணங்கள் உண்டு. பெர்கமு நகரம், உரோம ஆளுகையின் கீழிருந்த காலம் அது. அப்பொழுதுதான் **வரலாற்றில் முதல் முறையாக உரோம இராயனுக்குப் (Caesar of Rome) பெர்கமு நகரில் ஓர் ஆலயம் (Temple) கட்டப்பட்டது.** அதில் ஒரு தூபபீடம் (Incense altar) அமைக்கப்பட்டது. இராயனுடைய ஆலய வழிபாட்டில் தூபவர்க்கத்தை எடுத்துத் தூபபீடத்தில் போட்டு "இராயனே தேவன்" (Caesar is Lord) என்று சொல்ல வேண்டும். இந்த இராஜாங்க வழிபாட்டு முறையை எல்லோர் மத்தியிலும் நடைமுறைப்படுத்த அதன் வழிபாட்டாளர்கள் மிக வெறித்தனமாகச் செயல்பட்டனர். தேவாதி தேவனுக்கு உண்மையான விசுவாசத்தோடிருந்தவர்கள் துன்பப்படுத்தப்பட்டார்கள். பல உபத்திரவங்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஆனாலும் விசுவாசத்தில் உறுதியாக நின்றனர்.

அந்திப்பா கொல்லப்பட்ட பின்னணியும் இதுதான். இயேசுவே ஆண்டவரென்று நிச்சயித்திருக்க தூபவர்க்கத்தைத் தூப பீடத்தில் போட்டு "இராயனே தேவன்" என்று சொல்ல மறுத்த காரணத்தால் கொல்லப்பட்டான். அவனது நிச்சயத்திற்கு மற்றுமொரு காரணமுமிருந்தது. அன்றைய உரோம கவர்னர்களுக்குப் (Proconsul) பட்டயம் (Sword) அடையாளமாக இருந்தது. ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு பெர்கமு சபைக்குத் தன்னை அடையாளப்படுத்தும் போது "இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர்" என்று (வெளி.2:12) தன்னைக் குறிப்பிடுகிறார். அது அவருடைய ஜீவனும் வல்லமையுமுள்ள வார்த்தையைக் குறிக்கிறது. **தேவனின் வார்த்தையாகிய பட்டயத்திற்கு அஞ்சுவதா? உரோம கவர்னரின் பட்டயத்திற்கு அஞ்சுவதா? என்ற கேள்வி எழுகிறது. அச்சுறுத்தும் உரோம கவர்னரின் பட்டயத்தை விட இயேசு கிறிஸ்துவின் வார்த்தையாகிய பட்டயத்திற்கு மதிப்பளித்து அதற்குக் கீழ்ப்படிவதே மேல் என்ற உறுதியோடு "இராயனே தேவன்" என்று சொல்வதை மறுதலித்து மரணத்தை ஏற்றுக்கொண்டான்.** இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவானை பரலோகத்தில் வரவேற்க பிதாவின் வலது பாரிசத்தில் எழுந்து நின்ற இயேசுகிறிஸ்து(அப்.7:56), அந்திப்பாவையும்

வரவேற்க எழுந்து நின்றிருப்பார். உத்தமமும் உண்மையுமுள்ள விசுவாசியே என்று அவனைக் கட்டித்தழுவியிருப்பார், எவ்வளவு பெரிய சிலாக்கியம் அது.

சாத்தானுடைய சிங்காசனம் இருக்குமிடம் என்று சொல்வதற்கு மற்றுமொரு காரணமுமுண்டு. **பெர்கமு மாநகரில் "ஈஸ்கலப்பியஸ்" (Aesculapius) என்ற "குணமாக்கும் தேவன்" (God of Healing) என்று சொல்லப் படுகிற தெய்வத்திற்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டது.** அந்த தேவனுக்கு ஓர் அடையாளச் சின்னமிருந்தது. பின்னிப்பிணைந்த இரண்டு பாம்புகள் (Entwined Serpents) ஒரு கம்பத்தில் நிற்பதுபோன்று அது அமைக்கப்பட்டிருக்கும். இன்றும் மருத்துவத்துறைக்கு அதுவே அடையாளமாயிருக்கிறது. வேதம் சர்ப்பத்தைச் சாத்தானுக்கு அடையாளப் படுத்துகிறது (2கொரி.11:3; வெளி.12:9;20:2) "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" (I am the Lord, who heals you) என்ற விசுவாசத்திலிருந்து மக்களைத் திசை திருப்புவதற்கான காரியங்கள் தோன்றலாயின (யாத்.15:26).

ஆனாலும் பெர்கமு சபையில் அநேகர் வழிவிலகிச் செல்லும் உபதேசங்கள் உட்பிரவேசித்தன. ஒரு சிட்டிகை (Pinch) தூபவர்க்கத்தை எடுத்து தூபபீடத்தில் போட்டால் என்ன தவறு என்று சமரசம் செய்து கொள்ளுவோரும், நட்பும் நல்லுறவும் கருதி பிறருடைய வழிபாட்டு முறைகளில் கலந்து கொள்வதில் என்ன தவறு என்று சமரசம் செய்துகொள்வோரும் பெருகினார்கள். இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசத்தில் வைராக்கியமாகச் செயல்பட்ட சபை, இரத்த சாட்சியாக மரிக்கவும் ஆயத்தமாயிருந்த சபை சரிவைச் சந்தித்தது எவ்வளவு பரிதாபத்திற்குரியது. ஆனாலும் அன்புள்ள ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து "நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் (வார்த்தை) அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்" என்று (வெளி.2:16)யில் எச்சரிக்கிறார். சாத்தான், "நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்..." என்று சவால் விட்டதற்கு ஏற்ப (ஏசா.14:12-14), பூலோகத்தில் முதலாம் நூற்றாண்டில் பெர்கமு மாநகரில் சாத்தானுக்கு ஆலயத்தைக் கட்டி எழுப்பி, இன்று உலக நாடுகளில் தமிழ்நாடு உட்பட பல இடங்களில் சாத்தானுக்கு ஆலயம் எழுப்பி வழிபாடுகள் நடக்கிற அளவுக்கு மூட நம்பிக்கை பெருகியுள்ளது நமக்கு அதிர்ச்சியைத் தருகிறதாக இருக் கிறது. நாம் சாத்தானின் கண்ணிகளில் சிக்கிக் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருப்போம். ஜெயங்கொண்டோருக்குப் பிரதி பலனையும் வாக்களிக்கிறார். "அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" என்ற (சங்.2:12) வசனத்திற்கேற்ப பரலோகப் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியத்தை அடைவோம்.

- இயேசுவின் பணியில், K. செல்வின் தங்கதுரை

# இரக்கமும் கிருபையுமுள்ள தேவன்

பிதாவாகிய தேவன், மோசேக்குத் தம்மை வெளிப்படுத்த விருப்பமுள்ளவராய், அவருக்கு முன்பதாகக் கடந்து போகிறபொழுது, தம்முடைய நாமத்தைக் குறித்து **"கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்"** என்று தேவன் தம்மைக் குறித்துத் தாமே வெளிப்படுத்துகிறார் (யாத்.34:6). அவர் தம்மைக் குறித்து வெளிப் படுத்தாவிட்டால், அவரை யாரும் அறிந்து கொள்ள முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். அநேக வேளைகளில், பழைய ஏற்பாட்டில் இருக்கிற தேவன் வேறு, புதிய ஏற்பாட்டில் இருக்கிற தேவன் வேறு என்று நாம் நினைக்கிறோம். பின் வரும் வார்த்தைகளை நீங்கள் கூர்ந்து நோக்குவீர்களானால், அவர் நேற்றும் இன்றும் என்றும் சதா காலங்களிலும் மாறாதவராயிருக்கிறார் (எபி.13:8). ஆகவேதான், அவர் தம்மைக் குறித்து, கிருபை, இரக்கம், நீடிய சாந்தம், மகாதயையும், சத்தியமுமுள்ள தேவன் என்ற வாக்குத்தத்தத்தை நமக்குக் கொடுத்தார். அப்படியென்றால், அந்த நற்பண்புகளை ஆராய்ந்து அறிந்து அவற்றை நாம் எப்படி அடைந்து கொள்ளலாம் என்பதைப் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு தியானிப்போம்.

## கிருபையும், இரக்கமுமுள்ள தேவன்

மோசேக்குத் தம்மை காண்பிக்கும் முன்பதாக, தேவனாகிய கர்த்தர், "நான்.. எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன்" என்று சொன்னார் (யாத்.33:19) "இரக்கம்" என்பதற்கு எபிரேயப் பாஷையில் அவர் பயன்படுத்தின வார்த்தை "ரக்காமியிம்" רַחֲמִים என்ற வினைச்சொல்லாகும். இந்த வினைச் சொல்லுக்குத் தொடர்புடைய பெயர்ச்சொல் "ரக்கம்" רֶחֶם என்பதாகும். அதன் பொருளாவது, அது ஒரு தாயின் கருவறையைக் குறிப்பிடுகிறது. ஒரு தாயின் கருவறை, ஒரு சிசுவை வளர்த்து எவ்வாறு பாதுகாக்குமோ, அதேபோல என்னுடைய இரக்கம் உங்களைப் பாதுகாக்கும் என்று அவர் சொல்லுகிறார். நீங்கள் என்னையே சார்ந்து, என்னையே நம்பியிருக்கிறபடியினால், நான் உங்களுக்கு இரக்கம் செய்கிறேன். அந்த இரக்கம் என்கிற வார்த்தையின் பொருள், தம்மையே சார்ந்து, தம்மையே நம்பி, வேறு கதியின்றி இருக்கும் அந்தக் குழந்தை, தாயின் கருவறையில் அவள் அளிக்கும் போஷாக்கினால் வளருவதைப் போல, தேவாதி தேவன் நம்மைப் போஷித்துப் பாதுகாப்பார். அவரையே சார்ந்திருக்கிற நம்மை எந்தத் தீங்கும் அணுகாமல் பாதுகாப்பார். ஆகவேதான், **"நாம் அவருக்குள் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்..."** என்று பரிசுத்த பவுல்

சொல்லுகிறார் (அப்.17:28). இது எதைக் குறிப்பிடுகிறது? நாம் ஒரு தாயின் கருவறையில் இருப்பதைப் போல தேவனுக்குள் இருக்கிறோம்; வாழ்கிறோம். ஆகவேதான், "நீங்கள் என்னைச் சார்ந்திருக்கிறபடியினால் நான் உங்களைப் போஷிக்கிறேன்; உங்களைப் பாதுகாக்கிறேன்" என்று ஆண்டவர் சொல்லுகிறார். எனக்குப் பிரியமானவர்களே, "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" (ரோம.8 :1). நீங்கள் கிறிஸ்துவுக்கு உட்பட்டவர்களாக இருந்து, அவருக்குள் இருக்கிறீர்கள் என்கிற அறிவு உங்களுக்குள் உண்டாயிருக்கும் பொழுது என்ன நடக்கிறது? அந்தக் கிருபையையும், இரக்கத்தையும் நீங்கள் அனுபவிக்க ஆரம்பிக்கிறீர்கள்.

சமீபத்தில் லெபனான் தேசத்தில் நடந்த வெடி விபத்து எல்லோரும் அறிந்ததே. அங்குள்ள துறைமுகத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருட்கள் திடீரென்று வெடித்து சிதறியதினால், நூற்றுக்கணக்கான மக்கள் பரிதாபமாக மாண்டு போனார்கள். அப்பொழுது, அந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு சபையில், ஆச்சரியமான சம்பவம் ஒன்று நடைபெற்றது. வெடி விபத்து நடப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பதாக, அந்த திருச்சபையின் போதகர் தன்னுடைய திருச்சபையிலுள்ள சிறுபிள்ளைகளுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தார். ஆனால், திடீரென்று அவருடைய மனதிற்குள் பரிசுத்த ஆவியானவர் உணர்த்தியதின் காரணமாக அவரது சிந்தையில் மாற்றம் ஏற்பட்டது. உடனே அவர் அங்கிருந்த பெரியோர்கள், சிறியோர்கள் என அனைவரையும் அழைத்து, "இத்துடன் இன்றைய நாளுக்கான நம்முடைய எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்கிறேன். எல்லோரும் தாமதமின்றி வீட்டிற்குச் செல்லுங்கள்" என்று துரிதப்படுத்தினார். அவர் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியில், "பரிசுத்த ஆவியானவர், எல்லோரையும் இந்த இடத்தைவிட்டு உடனே அனுப்பு என்றார். அந்த நேரத்தில் என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் அந்த உணர்த்துதலுக்குக் கீழ்ப்படிந்தேன். உடனே நான் எல்லோரையும் திருச்சபையிலிருந்து வீட்டிற்கு அனுப்பினேன்". எல்லோரையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, அவரும் தன்னுடைய வீட்டிற்குச் சென்றுவிட்டார். ஆகவே, அன்று அந்த திருச்சபையின் முப்பது உறுப்பினர்களும் நூற்றுக்கும் அதிகமான சிறுவர்களும் அதிசயமாக வெடி விபத்திலிருந்து உயிர் தப்பினர். திருச்சபையின் கட்டிடம் மட்டும் பாதிக்கப்பட்டது.

ஆம், பிரியமானவர்களே, சில நேரங்களில் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் செய்கிற கிரியைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியாது.

தேவன் செய்கிற செயல்களை புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவர் இரக்கம் செய்து, நம்மைப் பாதுகாக்கிறார். **நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால், ஆவியின் சிந்தனையின்படி நடக்கும்பொழுது, அவருடைய இரக்கம் நம்மை நடத்துகிறது.** எவ்வளவு பெரிய இரக்கம், தாயின் இரக்கத்தைக் காட்டிலும் பன்மடங்கு இரக்கத்தையுடையவராய் தன்னைச் சார்ந்திருக்கிறவர்களை அவர் பாதுகாக்கிறார்.

## நீடிய சாந்தமுள்ள தேவன்

கிருபையும் இரக்கமும் உடைய தேவன், நீடிய சாந்தமுடையவராகவும் இருக்கிறார். நீடிய சாந்தம் என்று சொன்னால், கோபப்படுவதற்கு தாமதப்படுதல் என்று அர்த்தம். இன்னொரு வேதாகம மொழிப்பெயர்ப்பு, அவர் நியாயத் தீர்ப்பு அல்லது தண்டனை வழங்கக் காலதாமதம் செய்கிறார் என்று கூறுகிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு, அவர் வருகிறார் என்று சொன்னவர், தாமதப்படுவதற்கு காரணம், எல்லோரும் இரட்சிக்கப்பட்டு மனந்திரும்புவதற்காக அவர் தாமதப் படுத்துகிறார் என்று சொல்லுகிறார் (2 பேது.3:9).

உதாரணமாக, யோனா தீர்க்க தரிசியை நாம் பார்ப்போமென்றால், நினிவே என்ற பட்டணத்திற்கு யோனா தீர்க்கதரிசியைத் தேவன் அனுப்புகிறார். “நீ நினிவேக்கு சென்று, உங்கள் பாவம் பெருகினது, உங்களுடைய அக்கிரமம் எனக்கு முன்பாக வந்து எட்டியது. ஆகவே, நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று சொல்” என்று சொன்னார். யோனா தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் அவன் விரும்பினபடி செயல்பட்டான். ஆனாலும் மீண்டுமாக தேவன் அவனைக் கீழ்ப்படியச் செய்து நினிவே பட்டணத்திற்கு அனுப்பி அவரது திட்டத்தின்படி செயல்படுத்தினார் என்பது நாம் நன்கு அறிவோம்.

யோனா தேவனைக் குறித்து அவர் சொன்னபடியே பிரசங்கம் செய்தார். 40 நாட்களில் நினிவே பட்டணம் கவிழ்த்துப் போடப்படும் என்று பிரசங்கம் செய்தார். உடனே நினிவே மக்கள் மனந்திரும்பினார்கள். சிறியோர் முதல் பெரியோர் வரை, அரசன் முதல் ஆண்டி வரைக்கும் அவர்கள் எல்லோரும் இரட்டுடுத்தி, உபவாசித்து இஸ்ரவேலின் தேவனை நோக்கிக் கெஞ்சினார்கள். இது மிகப்பெரிய அற்புதம், தேவனாகிய கர்த்தர் யாவரையும் அழிக்க விரும்பமாட்டார். அவர், சாகிறவனுடைய சாவை விரும்புவதில்லை என்று வேதவசனம் சொல்லுகிறது (எசே.18:22). அவர் சிறியோரையும், பெரியோரையும், புறஜாதி மக்களையும், எல்லோரையும் நேசிக்கிறார். காரணம், அவரே நம்மை உருவாக்கினவர், ஆதி காலத்தில் முதன் முதலாக வெளிநாட்டிற்கு மிஷினெரியாகச் சென்றவர் யோனா

தீர்க்கதரிசிதான். அங்கே அவர் கர்த்தருடைய செய்தியை அறிவித்தார். எல்லோரும் மனந்திரும்பினார்கள். தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்'' (யோனா 3:10). தேவன் அந்த ஜனங்களை அழிக்காமல் காப்பாற்றினார்.

எனக்குப் பிரியமானவர்களே, தேவன், ஜனங்களைத் தண்டனைக்குத் தப்புவிக்க விரும்புகிறார். அவர்கள் எப்படிப்பட்ட பாவம் செய்தாலும், அந்தப் பாவி மனந்திரும்ப வேண்டும். அவனை எப்படியாவது மன்னிக்க வேண்டும் என்று தகப்பனுடைய இருதயம் துடிக்கிறது. என் ஜனங்கள் மனந்திரும்பமாட்டார்களா? நான் அவர்களை இரட்சிக்கக் கூடாமல் போய்விடுமோ? என்று அவருடைய மனம் துடிக்கும். எப்படியாகிலும் அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று தாயின் உள்ளம் கொண்டவராய், தந்தையின் கரிசனை கொண்டவராய் அவர் நம்மை நோக்கிப் பார்க்கிறார். அப்படித்தான் தேவன் அன்று நினிவேயைக் காப்பாற்றினார். யோனா தீர்க்கதரிசி பயந்ததற்குக் காரணம், ''ஒரு தீர்க்கதரிசி சொன்னது நடக்காமல் போனால், அவன் மெய்யான தீர்க்கதரிசி அல்ல. அது கர்த்தருடைய வார்த்தை அல்ல'' என்று வேதம் கூறுகிறது (உபா.18:22). இது தேவனுக்குத் தெரியும். ஆனால், தேவன் எரேமியா தீர்க்கதரிசி மூலம், ''பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய்ப் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கை விட்டுத் திரும்பினால், நானும் **அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்**'' என்று சொன்னார் (எரே.18: 7,8). ''நான் மனம் மாறுவேன்'' என்று தேவன் சொல்லுகிறார். தேவன் தம்முடைய நாமத்தைத் தாமே பிரகடனப்படுத்து கிறார். அவர், ''நான் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும் உள்ளவர்'' என்று சொல்லுகிறார். நீடிய சாந்தம் என்றால், குற்றம் செய்த யாரையும் உடனே தண்டிக்க விரும்பமாட்டார்; அவர்கள் மனந்திரும்புவதற்கு அவர் தருணம் தருகிறார். அவர் தண்டனை வழங்குவதில் மிகத் தாமதப்படுத்துகிற தேவன். அவர் உடனே தண்டிக்க மாட்டார். தமிழில் ஒரு பழமொழி உண்டு. ''அரசன் அன்றே கொல்லுவான்; தெய்வம் நின்று கொல்லும்'' என்று. எனக்குப் பிரியமானவர்களே, தேவனாகியக் கர்த்தர் ஒரு மனுஷனையும் தண்டிக்க விரும்பவில்லை. ஆகவே தான், ''நான் மனுஷரை அழிக்கும்படியாக அல்ல, அவர்கள் இரட்சிப்படையவே வந்தேன்'' என்று குமாரனாகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறார், அதுதான் தேவனுடைய குணம்.

அதற்காகவே இயேசு கிறிஸ்துவை பிதாவாகிய தேவன் இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தார். தம்முடைய குணாதிசயங்களை விவரிப்பதற்காக, தாம் யார் என்பதைச் சொல்லுவதற்காக அனுப்பி வைத்தார்.

அன்பானவர்களே, அவருடைய குணாதிசயங்களை விவரித்து நமக்கு ஏன் வெளிப்படுத்தித் தருகிறார் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவருடைய குணாதிசயங்களை நாம் அடைந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்த்து அப்படிச் செய்கிறார். நம்மை அவருடைய சாயலுக்கொப்பாக மாற்றவேண்டும் என்பதே அவரது திருநோக்கம். அது நிறைவேற வேண்டுமென்பதற்காகவே நீடிய பொறுமையோடு காத்திருக்கிறார். அவர் காத்திருக்கும் காலம் நமக்குக் கிருபையின் காலம். கிருபையின் காலத்தை அசட்டை செய்துவிடாமல் கிருபையைப் பெற்று அவருடைய சாயலுக்கொப்பாக மாறுவோம். அவர் மீண்டும் விரைவில் வரப்போகிறார். ஆயத்தமாயிருப்போம்.

**– நன்றி: டாக்டர்.பால் N, Mo: 9884739635 www.glory ofjesus.org, Chennai.** ●

# நீ இன்னும் உன் சொந்த வீட்டிற்கு வரவில்லையே

அமெரிக்காவைச் சேர்ந்த D.J. டாட்வின் ஒரு சிறந்த மிஷனெரி. அவரும் அவருடைய மனைவியும் குடும்பமாக ஆப்பிரிக்கா கண்டத்தில் 40 ஆண்டுகள் மிகக் கடினமான சூழ்நிலைகள் மத்தியில் அயராது அருட்பணியை செய்து வந்தனர். அநேகரை ஆண்டவருக்குள் வழிநடத்தும், வல்லமையான கருவியாக ஆண்டவர் அவர்களைப் பயன்படுத்தினார்.

வயது முதிர்வின் காரணமாக அமெரிக்கா திரும்ப தீர்மானித்தனர். ஒரு குறிப்பிட்ட நாளில் கப்பல் பயணத்தைத் தொடங்கினார்கள். கப்பலில் அமெரிக்கா வந்து சேர்ந்தனர். துறைமுகத்திலுள்ள மைதானத்தில் திரளான மக்கள் கூடியிருந்தனர். இசைக்குழுவினர் இசை விருந்தளித்துக் கொண்டிருந்தனர். மிஷனெரி டாட்வின் தன்னை வரவேற்பதற்குத்தான் மக்கள் கூடியிருக்கின்றனர் என்று நினைத்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். தன் மனைவியிடம், “பார்த்தாயா, மக்கள் நம்மை மறந்துவிடவில்லை. நாம் அறிவிப்பு எதுவும் கொடுக்காதிருந்தும் இவ்வளவு திரளான மக்கள் நம்மை வரவேற்க கூடியிருக்கிறார்கள்! என்று பெருமிதத்தோடு கூறினார். ஆனால் தான் வந்த அதே கப்பலில்தான் அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் சுற்றுப்பயணம் முடித்து திரும்பிக் கொண்டிருக்கிறார் என்ற தகவல் பின்னர்தான் தெரிந்துகொண்டார். ஜனாதிபதி வரவேற்பு மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இசைக்குழுவினர் இசைக்கும் சத்தமும் மக்கள் ஜனாதிபதியை வரவேற்கும் குரலும் வானைப்பிளப்பது போலிருந்தது. ஆனால் மிஷனெரி டாட்வின் தம்பதியினரை வரவேற்பதற்கு ஒருவர்கூட வரவில்லை. அவர் மிகுந்த துக்கமடைந்தார். 40 ஆண்டுகள் ஆண்டவருக்கென்று

அருட்பணியாற்றிய நம்மை யாரும் கண்டுகொள்ளவே இல்லையே என எண்ணிய துக்கத்தை மாற்ற முடியவில்லை.

தனது சொந்த வீட்டிற்கு டாட்வின் தம்பதியினர் வந்து சேர்ந்தனர். உறவினர்கள் சிலர் அவர்களைச் சந்தித்து வரவேற்றனர். மிஷனெரி தம்பதி யினர் முழங்கால்படியிட்டுத் தங்கள் ஊழியத்தை முடித்து வந்தமைக்கு நன்றி கூறி ஜெபித்தனர். அதோடு துறைமுகத்தில் தன்னை வரவேற்க ஒருவர் கூட இல்லையே என்று தான் அனுபவித்த துக்கத்தையும் ஆண்டவரிடம் முறையிட்டார். உடனே மெல்லிய சத்தத்தில் ஆண்டவர் அவருடைய இருத யத்தில் பேசினார். "மகனே, நீ இன்னும் உன் சொந்த வீட்டிற்கு வந்து சேர வில்லையே" என்று பதிலளித்தார். மறுவினாடியே தன்னை வரவேற்க யாரு மில்லையே என்ற தனது எதிர்பார்ப்பை அறிக்கை செய்துவிட்டுவிட்டார். அவருடைய உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பியது. என்னுடைய நித்திய வீட்டில் என்னை வரவேற்க என் ஆண்டவர் இருக்கிறாரே என்று எண்ணி அக மகிழ்ந்தார். நீங்கள் ஆண்டவருக்கென்று செய்த ஊழியத்தின் காரணமாக மற்றவர்கள் பார்வையில் அசட்டை செய்யப்பட்டவர்களாக எண்ணுகிறீர் களோ, கலங்காதிருங்கள். உங்களை தூதர்கள் கூட்டம் வந்து வரவேற்று நித்தியவீட்டிற்கு அழைத்துச் செல்லும். பரலோகத்தில் உங்களை வரவேற்க ஆண்டவர் நிற்பார். "உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, என் சந்தோ ஷத்தில் பிரவேசி" என்ற உங்களைத் தோளில் தட்டி வரவேற்பார். இதைவிடப் பேரானந்தம் என்ன இருக்கமுடியும். ●

**18 ஆம் பக்கத் தொடர்ச்சி...**

கர்த்தர் கொரியர்களின் இருத யத்தில் கிரியை செய்ய ஆரம்பித் தார். ஒரு கொரிய சகோதரன், ஜப்பானிய சகோதரனின் கரங் களைப் பிடித்தார். அதைக் கண்ட மற்றவர்களும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு கதற ஆரம் பித்தனர். அத்தனை நூற்றாண்டு களாக இருந்த பகைமை மறைந்து கிறிஸ்துவின் அன்பு பெருக்கெடுக்க ஆரம்பித்தது. ஜப்பானியரின் மன் னிப்பின் கண்ணீரும், கொரியர் களின் மன்னித்தலின் கண்ணீரும் கலந்து, அந்த இடம் முழுவதும் தேவ பிரசன்னத்தால் நிரம்பியது.

அன்பானவர்களே, நாமும் யார் மேலாவது கசப்பையும் விரோதத் தையும் வைத்துக் கொண்டிருக் கிறோமா? பிதாவாகிய தேவன் தம் முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய பாவத்தைப் போக்கும் கிருபாதார பலியாக சிலு வையில் ஒப்புக்கொடுக்கும்படி இவ் வுலகில் அவதரிக்கச் செய்தாரே. அந்த அன்பு எவ்வளவு பெரியது. அந்த அன்பு நம்மில் வேரூன்றட்டும். அந்த அன்பு நம்மை நிரப்பட்டும். கசப்பான வேர்கள் பிடுங்கி எறியப் பட்டும். கிறிஸ்து நமக்கு மன்னித்தது போல நாமும் பிறரை எப்போதும் மன்னிக்க ஆயத்தமாக இருப்போம்.

- **தகவல்:** வாழ்வில் வார்த்தை ●

# சமாதானத்தின் மணியொலி எங்கும் ஒலிக்கட்டும்!

செப்டம்பர் 21ஆம் நாள் சர்வதேச சமாதான தினம் (International day of Peace) என உலகநாடுகள் முழுவதிலும் கொண்டாடப்படுகிறது. இரண்டாவது உலக யுத்தத்தின் போது அமெரிக்கா ஜப்பான் மீது நடத்திய அணுகுண்டுத் தாக்குதலில் 2,50,000 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். அந்த உச்சக் கட்டப் பேரழிவின் விளைவாகத் தான் ஐக்கியநாடுகளின் சபை 1945இல் அமெரிக்காவில் நியூ யார்க்கில் உருவாக்கப்பட்டது. இந்த உருவாக்கத்தில் நம்நாடும் முக்கிய பங்களித்தது. ஜப்பானியர், ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத் தினர் நாடுகளிலிருந்து நன்கொடை யாக நிதி உதவி பெற்றுச் சமாதான மணி (Peace Bell) ஒன்றை நிறுவ ஒரு சிறுகோபுரத்தையும் ஒரு பெரிய மணியையும் வடிவமைத்தனர். ஜப்பான் நாட்டின் மிகப் பழமையான ஹனாமிடோ ஆலய அமைப்பின் படியே ஒரு கோபுரத்தை வடிவ மைத்து மிகப்பெரிய மணியையும் அமைத்து நியூயார்க்கில் ஐ.நா.சபை வளாகத்தில் கட்டி ஐ.நா.சபைக்கு 1945ஆம் ஆண்டே நன்கொடை யாக அளித்துள்ளனர். சமாதான மணிகோபுரத்தை அட்டைப் படத்தில் காணலாம்.

அப்பாவி மக்களின் பேரழிவைச் சிந்தையில் கொண்டு போர் செய்யும் எண்ணங்கள் எழாமல் கட்டுப் படுத்தப்பட்டு சமாதானம் நிலவ வேண்டும் என்பதை வலியுறுத்தும் படியாக இது நிறுவப்பட்டுள்ளது. உலக நாடுகளின் தலைவர்கள் ஐ.நா. சபை வளாகத்திலிருக்கும் இந்த நினைவால யத்திற்குச் செல்லும்போது சமாதா னத்தின் மேம்பாட்டிற்கு எங்கள் நாடு உறுதுணையாக இருக்கும் என்ற உறுதியளிக்கும் வகையில் இந்த மணியை ஒலிப்பார்கள். ஐ.நா. சபை யின் பொதுச் செயலாளர் கோபி அன்னான் காலத்தில் ஐ.நா. சபையின் தீர்மானத்தின்படி 1981 முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 21ஆம் நாள் உலக சமாதானம், போர் நிறுத்தம் மற்றும் அகிம்சை ஆகியவற்றின் நாளாக இது அனு சரிக்கப்படுகிறது.

சர்வதேச சமாதான தினம் 75 ஆண்டுகள் நிறைவு தினமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சமாதானம் தொடர்பான கருப்பொருள் தலைப்பாகக் கொடுக்கப் படுகிறது. அதன் அடிப்படையில் கருத் தரங்குகள், கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகளை நடத்த சர்வதேச அளவில் ஊக்குவிக் கின்றனர். இவ்வாண்டு **“ஒருங் கிணைந்து நன்நெறியான சமாதா னத்தை உருவாக்குவது”** (Shaping Peace together) என்ற தலைப்பினை முன்வைத்துள்ளனர். எனினும் ஐ.நா.சபை எடுத்துக் கொள்ளும் சமா தான முயற்சிகளுக்கான பயன் எந்த

அளவு உண்டாயிருக்கிறது என்பது கேள்விக் குறியாகவே நிற்கின்றது.

**நாம் முயற்சியை விட்டு விடப் போவதில்லை (We don`t give up)**

21.9.20இல் ஐ.நா.சபை வளாகத்திலுள்ள சமாதான மணி (Peace Bell) கோபுரத்தின் முன்பு நடந்த நிகழ்ச்சியில் ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் அன்ட்டோனியோ குட்டரஸ் (Antonio Guterres, the general secretary of UNO) உரை நிகழ்த்தினார். “நாம் இங்கே கூடிவந்திருக்கிறோம் என்றால் சமாதானம் நிலவ வேண்டும் என்பதில் நாம் தீர்மானமாக இருக்கிறோம். ஆகவே **நம்முடைய முயற்சியை விட்டுவிடப் போவதில்லை**. சச்சரவுகளும், மோதல்களும் உலகமெங்கும் பெருகிக் கொண்டிருக்கிறது. பயங்கரவாதம் பெருகிக்கொண்டிருக்கிறது. பாதுகாப்பற்ற நிலவரங்களைக் காண்கிறோம். மக்கள் வெகுவாய்ப் பாதிக்கப் படுகிறார்கள். ஆனாலும் **நாம் முயற்சியை விட்டுவிடப்போவதில்லை**. இருநாடுகள் மோதிக் கொள்ளும்போது இந்த சர்வதேச சமாதான தினத்தை மதித்து, ஐ.நா. சபையின் போர் நிறுத்த வேண்டுகோளை மதித்து நிறுத்துவதில்லை. ஆனாலும் **எங்கள் முயற்சியை நாங்கள் விட்டுவிடப் போவதில்லை**. உலகின் பல பகுதிகளில் மனித உரிமைகள் துணிகரமாக மீறப்படுகின்றன. மனித உரிமை நடைமுறைத் திட்டங்கள் தோல்வி யடைந்து கொண்டிருக்கின்றன என்பதை அறிகிறோம். எனினும் மனித உரிமையை மதிப்பதிலும் மனிதன் கண்ணியத்தை மதிப்பதிலும் **நாம் முயற்சியை விட்டுவிடப்போவதில்லை**. சமாதானத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை உணருகிறோம். அநேக இடங்களில் சமாதான நடவடிக்கைகள் மீறப்படுகின்றன. ஆனாலும் **நாம் முயற்சியை விட்டுவிடுவதில்லை**. கொரோனா வைரஸ் தொற்றின் அச்சத்தால் நாம் தோளோடு தோள் நெருங்கி நிற்க முடியவில்லை. சமூக இடைவெளி என்பதால் விலகி நிற்கிறோம். ஆனால் சமாதானத்தின் காரணமாக இணைந்து நிற்கிறோம். நாம் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை அறிந்திருக்கிறோம். நம்மால் முடியும், சாதிப்போம் என்பதில் தீர்மானமாயிருப்போம்” என்று தனது உரையில் கூறியுள்ளார்.

சமாதானத்தை அடைய பிரயாசங்களைத் தீவிரப்படுத்தினாலும் அடைந்து கொள்ள முடியாத அளவுக்குத் தடைகள் தலை தூக்கி, சமாதானம் விலகிச் சென்று கொண்டேயிருக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால் சமாதானத்தை எட்டுவது கானல் நீரை விரட்டிப் பிடிக்கும் முயற்சியாகவே தோன்றுகிறது (Chasing the mirage). அதைத்தான் நாம் ஐ.நா.சபை பொதுச் செயலாளரின் உரையிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். ஐ.நா. சபையின் உத்தரவுகளையும் ஆலோசனைகளையும் அநேக

நாடுகள் அலட்சியம் செய்வதுமல்லாமல் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கின்றன. அதை ஐ.நா. சபை அமுல்படுத்த முடியாததால் அதன் வல்லமையை இழந்துகொண்டே வருகிறது.

## சமாதானத்திற்கு வேதம் வழி காட்டுகிறது

அப்போஸ்தலனாகிய யாக்கோபு ஒரு கேள்வியை எழுப்பி அதற்கு பதிலளிக்கிறார். "உங்களுக்குள்ளே யுத்தங்களும், சண்டைகளும் எதினாலே வருகிறது? உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா?" (யாக்.4:1). இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது..."(சங்.133:1). நிச்சயமாகவே சகோதர அன்பிலும், நல்லிணக்கமான தன்மையிலும் வாழ வேண்டும். அநேக சந்தர்ப்பங்களில் பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய பாவத்தைப் போக்கும் கிருபாதார பலியாகச் சிலுவையில் ஒப்புக் கொடுக்கும்படி இப்பூவுலகில் அவதரிக்கச் செய்தாரே. அந்த அன்பு எவ்வளவு பெரியது! அந்த அன்பு நம்மில் வேரூன்றட்டும்! அந்த அன்பு நம்மை நிரப்பட்டும்! கசப்பான வேர்கள் பிடுங்கி எறியப்படட்டும்! நாம் அப்படி வாழ்வதில்லை. லோத்து தன்னுடைய பெரியப்பாவாகிய ஆபிரகாமிடம் சண்டை போட்டுவிட்டுப் பிரிந்துபோய்விட்டான் (ஆதி.13ம் அதிகாரம்). அப்சலோம் தன் தகப்பனாகிய தாவீதோடு தகப்பனென்றும் பாராமல் ஒரு யுத்தத்தையே நடத்தினான். தாவீது அப்சலோமுக்குப் பயந்து தலைமறைவாகி விடும் சூழ்நிலைகளைச் சந்தித்தான் (2 சாமு.13-18 அதிகாரங்கள்). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு மூன்றரை ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த 12 சீஷர்களுக்குள் பரலோக இராஜ்ஜியத்தில் நமக்குள் யார் பெரியவராயிருப்பார் என்ற வாக்குவாதம் ஏற்பட்டதைப் பார்க்கிறோம் (லூக்.9:46-48). **தனி மனிதர்களுக்குள் யுத்தங்கள் நடப்பது போலவே சபைகளிலும், சமுதாயத்திலும் தேசத்திலும், தேசத்துக்கும் தேசத்துக்கும் யுத்தங்கள் தொன்று தொட்டு நடந்து கொண்டுதான் இருக்கின்றன.** சில நாடுகள் தங்கள் நாடு வல்லரசு நாடாக வேண்டுமென்று ஆசைப்பட்டு வறுமையில் வாடும் மக்களைக் கூட மறந்து ஆயுதங்களைப் பெருக்குவதிலும், படைபலத்தைப் பெருக்கவும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுகிறார்கள். மனுக்குலத்தையே அழிக்கும் திறனுள்ள அணு ஆயுதங்களையும் தற்போது உயிரிய ஆயுதங்களையும் (Bio Bombs) தயாரித்து வருகின்றனர். இதுபோன்ற காரியங்கள் உலகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. எப்பொழுது யுத்தம் வெடிக்கும் என்று காலக்

கடிகார முள் டிக், டிக் என்று அடித்து ஓடிக்கொண்டிருப்பது போல ஒவ்வொருவருடைய இருதயமும் திக், திக் என்று பீதியில் அடித்துக் கொண்டிருக்கிறது.

**தேவனால் சமாதானம் சாத்தியமாகும்**

வேதம் ஆண்டவரை "சமாதான பிரபு" (Prince of Peace) என்றும் "சமாதானக் காரணர்" (Author of Peace) என்றும் "சமாதானத்தின் தேவன்" (God of Peace) என்னும் கிறிஸ்துவின் பிறப்பைத் தேவதூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்த போது "பூமியிலே சமாதானம் உண்டாவதாக" (Peace be on earth) என்று வாழ்த்தியதையும் காண்கிறோம். ஆனாலும் சமாதானம் எட்டாத கனியாக இருக்கிறதே. ஏன்? நாம் முதலில் கண்டதுபோல போர் செய்யும் இச்சை (The Lust for war) நமக்குள் செயல்படுவது. அது முறியடிக்கப்படவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் சமாதானமான நிலை (The State of Peace) எது என்பதை விவரிக்கிறார். நாம் எல்லா பக்தியோடும் (தேவபக்தியோடு தேவனில் சார்ந்துகொள்ளும் நிலை) நல்லொழுக்கத்தோடும் **கலகமில்லாத அமைதலான ஜீவியம் செய்வதாகும்.** அதுதான் சமாதானத்தின் வரையறை (Definition) என்று சொல்லலாம். இதை எட்டுவது எப்படி? அதைத் தொடர்ந்து பவுல் ஆளுகிறவர்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கச் சொல்லுகிறார் (1 தீமோ. 2:1,2). நாம் அதில் தவறியிருக்கிறோம் என்பதை ஒப்புக்கொண்டு சீர்படுத்த வேண்டும்.

"மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" (For to be carnally minded is death, but to be spiritually minded is life and peace) (ரோம.8:6). மேலும், "மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை" (வ.7). இந்தப் பகை நீக்கப்பட வேண்டுமானால் மாம்ச சிந்தையிலிருந்து விடுதலை பெற வேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது. நம்முடைய வழிகள் மாம்ச சிந்தையுள்ளதாயிருக்கிறதா? ஆவிக்குரிய சிந்தையுள்ளதாயிருக்கிறதா? என்பதை ஆராய்ந்து அறிந்து நாம் சீர்ப்பட வேண்டியதிருக்கிறது. ஆகவேதான் சாலொமோன் ஞானி "ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்" என்று கூறுகிறார் (நீதி.16:7).

"ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1 யோவா.2:15), உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. "உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவ

னுக்குப் பகைஞனாகிறான்'' (யாக்.4:4). இந்த ஆசையினால் சில தலைவர்கள், தங்கள் எல்லைகளை விசாலமாக்கும் எண்ணங்களை உருவாக்குகிறார்கள். அதினால் விளையும் உயிரிழப்புகளைக் குறித்து அவர்களுக்குக் கவலை யில்லை, வல்லரசு நாடுகள் சில நாடுகளை தங்கள் ஆளுகைக்குள் கொண்டுவருவதற்கு அந்த நாட்டின் அரசாங்கத்தைத் தங்களுக்கு இசைந்து செயல்படும் பொம்மை அரசாக (Puppet Government) அமைத்துக் கொள்வதைக் காண் கிறோம். ''தன்னுடையதல்லாததைத் தனக்கென்று சேர்த்துக் கொள்ளுகிற வனுக்கு ஐயோ'' என்று வேதம் சொல்லுகிறதை மறந்து விடுகின்றனர் (ஆபகூக் 2:6). ஆகவே போர் செய்யும் இச்சை மேலோங்கி விடு கிறது.

உலகம் முழுவதையும் தன் னுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று ஆசைப்பட்ட மகா அலெக்சாந்தர் தன்னுடைய மரணவேளை நெருங்கியபோது தன்னுடன் இருந்த வர்களிடம் ''என்னுடைய சவப் பெட்டியை மூடும் போது என் னுடைய இரண்டு கைகளும் வெளியே நீட்டிக் கொண்டிருப்பது போல சவப்பெட்டியை அமைக்க வேண்டும். ஏனெனில் நான் உல கத்தை விட்டுச் செல்லும்போது எதையும் கொண்டு செல்வதில்லை என்பதை மக்கள் கண்டு உணர வேண்டும்'' என்று சொன்னாராம்.

எசேக்கியா இராஜாவுக்கு விரோத மாக அசீரியா இராஜாவாகிய சன கெரீப் படையெடுத்து வந்து யூதா தேசத்தை முற்றுகைபோட்ட காலக் கட்டத்தில் எசேக்கியா செய்த காரி யத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சனகெரிப், எசேக்கியா இராஜாவையும் அவன் வழிபடும் யேஹோவா தேவனையும் கடுமை யாக அவதூறானதை எழுதியனுப் பிய கடிதத்தைத் தேவாலயத்தில் பிரித்துத் தேவனை நோக்கி மன்றா டியபோது யுத்தத்தை நிறுத்தும் சூழ்நிலையை தேவன் மாற்றிக் கொடுத்தது மாத்திரமல்ல. சனகெரீப் இராஜா அவனது நாட்டிலேயே நிஸ்ரோத்தின் கோவிலில் பணிந்து கொள்ளும்போது அவனது சொந்தக் குமாரர்களாலே கொல்லப்பட்ட சம்ப வத்தை வேதத்தில் காண்கிறோம் (ஏசா.36,37 அதிகாரங்கள்).

ஆளுகிறவர்களும், அதிகாரிகளும் சமாதானத்தைத் தரவல்லவரை நோக்கிப் பார்க்க தீர்மானிக்கட்டும். ''கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத் திற்குச் சமாதானம் அருளி, அவர் களை ஆசீர்வதிப்பார்'' (சங். 29:11). சமாதானத்தை அருளுகிறவர் சமாதா னத்தைத் தரட்டும். ''கர்த்தர் தம் முடைய முகத்தை உன்மேல் (நம் மேல்) பிரசன்னமாக்கி உனக்கு (நமக்கு) சமாதானம் கட்டளை யிடக்கடவர்'' (எண்.6:25). ●

# கசப்பான வேரைப் பிடுங்கி எறியுங்கள்

கி.பி 1592 - 1598 வரை ஜப்பானியர்கள் கொரியா தேசத்தைக் கைப்பற்றி அதை ஆளுகை செய்து வந்தனர். மற்ற எல்லாரைப் பார்க்கிலும் ஜப்பானியர் கொரியர்களிடம் மிகவும் மோசமாக நடந்து கொண்டார்கள். குறிப்பாக, பெண்களையும் சிறு குழந்தைகளையும் அவர்கள் நடத்திய விதம் மிகவும் கொடுமையானது. இன்றளவும் அந்தக் காயங்களை மனதில் சுமந்தபடி வாழ்கின்ற கொரியர்கள் உள்ளனர்.

ஜப்பானியர்கள் கொரியாவை கைப்பற்றியவுடன் முதலில் செய்த காரியம் அங்கிருந்த தேவாலயங்களை இழுத்து மூடியதுதான். மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்த மிஷனரிகளை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைகளை முழுவதுமாக நிறுத்திய ஜப்பானியர் முக்கியமான போதகர்களைச் சிறையில் அடைத்தனர். அதில் ஒரு போதகர் மட்டும் தான் இருந்த இடத்தின் காவல்துறை அதிகாரியிடம் அடிக்கடி போய் தன் சபைக்கு ஒரு ஞாயிறு ஆராதனையை மாத்திரம் அனுமதிக்கும்படி கேட்டுக்கொண்டே இருந்தார். அவருடைய தொல்லையைப் பொறுக்க முடியாமல் அந்த அதிகாரி ஒரு ஞாயிறு ஆராதனைக்கு அனுமதித்தார். உடனே வேகமாகச் செய்தி பரவியது.

இதுவரை ஆராதனைக்குச் செல்ல முடியாமல் இருந்த கிறிஸ்தவர்கள், அனுமதி கிடைத்தவுடன், சூரியன் உதிக்கும் முன் குடும்பமாக ஆலயத்திற்குச் சென்று, காத்திருந்து, நேரமானவுடன் கதவுகளைத் திறந்து உட்பிரவேசித்து, கதவுகளை அடைத்துக் கர்த்தரை ஆராதிக்க ஆரம்பித்தனர். கொரிய சபை மக்கள் மிகவும் அழகாகப் பாடுவார்கள். அவர்களின் பாடல் சத்தம் மூடியிருந்த கதவுகளையும் மீறி வெளியே அழகாக ரீங்காரமிட ஆரம்பித்தது. அவர்கள் **“உம்மண்டை கர்த்தரே”** (Draw me nearer, nearer, blessed Lord) என்னும் பாடலைப் பாட ஆரம்பித்த பொழுது வெளியே இருந்த ஜப்பானிய வீரர்கள் அந்த ஆலயம் முழு வதையும் மண்ணெண்ணையால் நனைத்து, தீ வைத்து விட்டார்கள். புகை வர ஆரம்பித்தபோது தான் உள்ளே இருப்பவர்களுக்கு தங்கள் ஆலயம் நெருப்பு வைக்கப் பட்டிருக்கிறது என்று தெரிய வந்தது. உடனே உள்ளே இருந்தவர்கள் ஜன்னலின் வழியாக தப்பும்படி போகத் துடித்த போது வெளியே இருந்த ராணுவத்தினரின் துப்பாக்கி குண்டுகள் அவர்கள் மேல் பாய்ந்தது.

தானும் தன் சபையினரும் இதிலிருந்து தப்பிக்க முடியாது என்று போதகருக்குத் தெரிந்துவிட்டது. வெளியே கொரியர்கள் தங்கள் மக்களுக்கு நடந்து கொண்டிருக்கும் அநீதியைக் கண்டு கொண்டிருந்த போதகர் இந்தப் பாடலைப் பாட ஆரம்

பித்தார். **சிலுவை அண்டையில் நம்பி வந்து நிற்கையில்...** (At the cross at the cross where I first saw the light) இந்தப் பாடலை சபை யாரும் அவரோடு இணைந்து பாடி னார்கள். தங்கள் கண்களுக்கு முன் நெருப்பு கொழுந்து விட்டு எரிய மேற்கூரை கீழே விழுந்து அனை வரும் மடியும் வரை இந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். வெளியே இருந்த ஜப்பானியர்களும் கொரியர்களும் அவர்கள் பாடியதைக் கேட்டார்கள். எரிந்து போனவர்களின் சடலங்களை எடுத்து சுத்தம் பண்ணு வது எளிது. ஆனால் உள்ளத்தில் எரிந்து கொண்டிருந்த வேதனை யையும் வெறுப்பையும் எடுத்து விடுவது எளிதல்ல. அதுவும் மரித்த வர்களின் உறவினர்கள் ஜப்பானி யர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பு, அதை அணைப்பது என்பது மிகவும் அரிதானதாக மாறியது.

வருடங்கள் கடந்தன. கிறிஸ்த வர்கள் எரிக்கப்பட்ட இடத்தில் ஒரு ஞாபகார்த்த மண்டபம் கட்டப்பட்டது. அதைக் காணும் பொழுதெல்லாம் கொரியர்களின் உள்ளங்களில் ஜப்பா னியர்களின் மேல் வெறுப்பு அதிக மாய்க் கொழுந்து விட்டு எரிந்தது. கிறிஸ்தவர்களாயிருந்தாலும் உலகம் தரக்கூடாத சமாதானத்தைக் கொடுக் கும் கிறிஸ்துவின் சமாதானம், அவர் கள் உள்ளத்திலிருந்து வெறுப்பினால் மறைந்து போயிருந்தது.

1972 ஆம் வருடம் ஜப்பானி லிருந்து ஒரு போதகர் குழு கொரியா விற்கு வந்தார்கள். அவர்கள் அந்த ஞாபகார்த்த மண்டபத்திற்கு வந்த போது தங்கள் மூதாதையார் செய்த குற்றத்தைக் கண்டார்கள். அவர் களுக்கு அந்த செய்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றாலும் தங்கள் நாடு தப்பிதம் செய்துவிட்டது என்ற குற்ற உணர்வுடன் தங்கள் நாட்டிற்கு திரும்பிச் சென்று, தங்கள் கூட இருக்கும் விசுவாசிகளிடம் நடந்த விசயங்களைக் கூறி, திரும்ப வந்து கிறிஸ்தவர்கள் எரிக்கப்பட்ட இடத்தில் ஓர் அழகான ஆலயத்தைக் கட்டினார்கள். அது திறக்கப்பட்ட நாளிலே அனைவரும் கூடி அந்த ஆலயத்தைக் கர்த்தருக்கு அர்ப் பணித்து ஆராதனை முடியும் தரு வாயில், ஒருவர் எழுந்து அந்த எரிந்து மடிந்து போன கிறிஸ்தவர்கள் பாடிய இரண்டு பாடல்களையும் மீண்டும் பாடுவது அவர்களை நினைவு கூறுவது போலிருக்கும் என்று கூற **உம்மண்டை கர்த்தரே நான் சேரட்டும்** என்ற பாடலைப் பாட ஆரம்பித்தார்கள். பாடி முடித்து **சிலுவை அண்டையில் நம்பி வந்து நிற்கையில்** என்ற பாடலைப் பாடும் போது ஜப்பானிய போதகர்களின் கண்களில் கண்ணீர் வழிய ஆரம் பித்தது. அவர்கள் தங்கள் கொரிய நண்பர்களின் கரங்களை பிடித்துக் கொண்டு கண்ணீரோடு தங்களை மன்னிக்குமாறு கெஞ்ச ஆரம்பித்தார் கள். கொரியர்களின் இருதயம் கரைய வில்லை. ஆனாலும் விடாமல் ஜப்பா னியர்கள் கேட்டுக் கொண்டிருந்த போது அந்தப் பாடலின் அர்த்தத்தை அவர்கள் கேட்டுக் கொண்டு இருந்த போதே... **11ஆம் பக்கம் பார்க்க...**



## மரணத்தில் நம்பிக்கையுள்ளவர்கள்

2020 செப்.19ஆம் நாள் தன்னுடைய 73ஆவது வயதில் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்த சகோதரி திருமதி.வைடா டிலனோ அவர்கள், வேர்டு ஆஃப் கிரைஸ்ட் ஊழியக் குடும்பத்தில் ஓர் அங்கத்தினர். மதுரை மீனாட்சி பெண்கள் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகவும், அந்தத் துறையில் தலைமைப் பொறுப்பிலும் **(Head of the Dept of English)** பணியாற்றி 2005ஆம் ஆண்டு பணி ஓய்வுபெற்றார்கள். அரசுப்பணியிலிருந்து அவர்கள் பணி ஓய்வுபெற்றாலும் முதிர் வயதுவரையும் இறைப்பணியிலிருந்து ஒருநாளும் ஓய்வு பெற்றதில்லை.

தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் அமைதியாக இருந்து தமிழ் கிறிஸ்தவர்களுக்கு நற்பணி செய்தவர்கள் (Silent Servant of God). ஆங்கிலத்தில் அநேக கிறிஸ்தவ இலக்கியப் புத்தகங்கள் உண்டு. அவற்றுள் தெரிந்தெடுக்கப்பட்ட எத்தனையோ புத்தகங்களைத் தமிழில் மொழியாக்கம் செய்து கிறிஸ்தவ தமிழ் சமுதாயத்திற்குப் படைத்தவர்கள். ஒரு புத்தகத்தின் ஆக்கியோனை எல்லாருக்கும் தெரியும். ஆனால் தமிழில் மொழியாக்கம் செய்தவர்களுக்கு பொதுவாக சரியான அங்கீகரிப்பு இருக்காது. ஆனாலும் அது அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. எங்கள் நிறுவனம் வெளியிட்ட வாழ்வியல் விளக்க வேதாகமம் ஆயத்தப்பணிகளில் அவர்களுடைய பங்களிப்பு உண்டு. அதை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ததில் அவர்களுக்குச் சிறப்பான பங்குண்டு.

அவர்களுடைய குடும்ப வாழ்க்கையில், நான் அறிந்தமட்டில் எப்பொழுதும் ஆண்டவரோடிருக்கும் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவர்கள். குடும்பத்தைக் குறித்த ஆண்டவருடைய திருநோக்கம் தேவபக்தியுள்ள சந்ததி உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் (மல்கி.2:15), அவர்களது இரண்டு பிள்ளைகளையும் பக்தியுள்ள சந்ததியாக உருவாக்கியிருக்கிறார்கள் என்பது மிகவும் சிறப்பான காரியமாகும். அவர்களது மகள் லாரா டிலனோ நம்முடைய 2
"தேவனுடைய வார்த்தை" இதழில் பல ஆண்டுகள் அநேகக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இப்போதும் "கிறிஸ்தியானின் மோட்சப் பிரயாணம்" தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார். இவ்வுலகில் வாழும் காலத்தில் சகோதரி.வைடா ஆண்டவரோடிருக்கக் கற்றுக்கொண்டதால், மறுமை வாழ்விலும் ஆண்டவரோடு வாழ்கிறார்கள். மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த வேளையில் மரணவேளையை முன்னறிந்தவர்களாக மரணத்திற்கு முன்பாகவே மகளை அருகிலழைத்து, "நான் ஆண்டவரிடத்தில் போகிறேன். துக்கப்படக்கூடாது. சந்தோஷமாக இருக்கணும்" என்று புன்னகையோடு சொல்லிச் சென்றிருக்கிறார்கள் என்றால் மரணத்தில் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கை எவ்வளவு பெரியது (நீதி.14:32). "நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" (ஏசா.51:12) என்று சொன்னவர் பிள்ளைகளோடும். குடும்பத்தோடும் இருப்பாராக. அவர்கள் மரித்தாலும் "என் ஜீவியமே, நான் அளிக்கும் செய்தி" (My life is my message) என்பதை சொல்லிக்கொண்டேயிருக்கிறது - **தொகுப்பாசிரியர்**

# சீர்கேடடைந்த உலகிற்கு இப்போதைய தேவை இயேசுகிறிஸ்துவே

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று வேதம் சொல்லுகிறது (2 தீமோ.3:16). கிரேக்க மூல மொழியின்படி "வேதவாக்கியங்களெல்லாம் தேவ சுவாசத்தால் ஊதப்பட்டவை" (All Scripture is God breathed) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே வேதவாக்கியங்களெல்லாம் தேவனுடையது (therefore it is the word of God) என்றும் எனவே இது குற்றம் கூற இயலாதவை (Infallible) என்றும் அர்த்தம்.

**"பூமியும் அதின் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது"** (சங்.24:1). ஏனெனில் பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் முழுமனுக்குலம் உட்பட யாவையும் அவர்தான் படைத்தார். ஆகவே அவைகள் அவருடையவைகளே. படைப்பின் வரலாற்றை ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்களில் தெளிவாகக் காண்கிறோம். மனுக்குலம் அனைத்துக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கிறவர் அவர்தான் (அப்.17:25). "சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது" (யோபு 33:4). ஒவ்வொருவருடைய சுவாசத்தின் கட்டுப்பாட்டைத் தம்முடைய கையில் வைத்திருக்கிறவர் என்று வேதம் கூறுகிறது (தானி.5 :23). ஆகவே உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கிய தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறார் (அப்.17:24).

ஆதாமின் சந்ததி அனைத்தும் அக்கிரமத்தின் பெருக்கம் காரணமாக நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தால் முற்றுமாக அழிக்கப்பட்டது. நோவாவின் மூன்று குமாரர்களாகிய சேம், காம், யாபேத் சந்ததிகள் உருவாயிற்று (ஆதி.10ம் அதிகாரம்). அவர்கள் பாபேலின் கோபுரம் கட்டியது தேவ சித்தத்திற்கு மாறாக இருந்தபடியால் ஒரே பாஷை பேசி வந்த அவர்கள் பாஷையை தாறுமாறாக்கி அந்த சந்ததியினரை பூமியெங்கும் சிதறடித்தார் (ஆதி.11ஆம் அதிகாரம்). எந்தெந்தப் பகுதிகளில் வாழ்ந்தார்களோ அப்பகுதிகளின் வானிலை சூழலுக்கு ஏற்ப (Climatic Condition) வெள்ளையர்களாகவும், கறுப்பர்களாகவும், இள மஞ்சள் நிறத்தவர்களாகவும், அவர்கள் நிறத்தால் வேறுபட்டிருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் பொதுவான தன்மை (Common Feature) ஒன்றிருக்கிறது. அதைத்தான் வேதம் இவ்வாறு சொல்லுகிறது. **"மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி..."** (அப்.17:26). ஆகவே இதை உணர்ந்த தமிழ் புலவர்கள், **"ஒன்றே குலம், ஒருவனே தேவன்"** (திருமூலர்) என்றும், **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

(கணியன் பூங்குன்றனார்) பதிவு செய்துள்ளார்கள்.

அப்படியானால் பிரிவினையும் பகைமையும் எப்படி வந்தது? **"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது"** (ஏசா.59:2). தேவனுக்கும் மனிதனுக்குமிடையில் பெரும் பிரிவினை உண்டாயிற்று. தேவனை விட்டு மனிதன் வெகுதூரம் சென்று விட்டான். ஆனாலும் மனுக்குலத்தை சிருஷ்டித்த தேவன் இந்தப் பிரிவினையையும் அதன் விளைவாக ஏற்பட்ட பகைமையையும் விரும்பவில்லை, மனிதனை அப்படியே விட்டுவிடவில்லை. மனிதனை தேவனோடு ஒப்புரவாக்க தம்மோடு வார்த்தையாக இருந்த தனது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அப்போஸ்தலனாகிய பவுல் அதை இவ்வாறு விவரிக்கிறார். "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" (எபே.2:13-16). சுருக்கமாகச் சொன்னால் நமக்கும் தேவனுக்கும் பகையை உண்டாக்கிய நமது பாவத்தை இயேசுகிறிஸ்து தம்மேல் ஏற்றுக் கொண்டு தமது சிலுவை மரணத்தின் மூலமாக பகையைக் கொன்று தேவனோடு நம்மை ஒப்புரவாக்கினார்.

உலகநாடுகள் முழுவதிலும் பாவம் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடும் காலக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். **வேதம் எவைஎவைகளெல்லாம் பாவம் என்று பட்டியலிட்டிருக்கிறதோ அவைகளில் பெரும்பானவற்றை குற்றமல்ல என்று நம்முடைய சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கிவிட்டோம்.** அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டு அதன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். அமெரிக்க ஜனாதிபதி, கவர்னர்கள், செனட்டர்கள், நீதிபதிகள் மற்றும் மேலான அந்தஸ்திலுள்ள அலுவலர்கள் கலந்து கொண்ட நினைவுக்கூட்டத்தில் (Memorial Service) தேவ செய்தி யளித்த உலகப் பிரசித்தி பெற்ற சுவிசேஷகர் மறைந்த பில்லிகிரஹாம் "வேதம் பாவம் என்று சொன்னவற்றைக் குற்றமல்ல என்று நீக்கியிருக்

கிறோம். பாவத்தை அனுமதிக்கும் வகையில் அநேக சட்டங்கள் இயற்றியிருக்கிறோம். நாம் வேதத்தை விட்டு விலகி வெகு தூரம் சென்று கொண்டிருக்கிறோம். ஆகவே பயங்கரவாதமும் அதன் விளைவாக ஏற்படும் அப்பாவி மக்களின் சாவுகளும் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே நாம் சரிசெய்து கொள்ள வேண்டிய காலத்திற்குள் வந்திருக்கிறோம். இல்லையேல் வரவிருக்கும் பேரழிவு தொடக்கமாகத்தான் இருக்கும்'' என்று எச்சரித்தார். ஆனால் அப்படிப் பட்டச் சட்டங்கள் எதுவும் இன்று வரை திருத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேவன் ஆணையும் பெண்ணையும் படைத்து அவர்களைத் திருமணம் எனும் அமைப்பில் இணைத்து **தேவபக்தியுள்ள சந்ததியை உருவாக்கும் திருநோக்கத்தோடு குடும்பங்களை உண்டாக்கினார்** (மல்.2:15). ஆனாலும் ஆணும் ஆணும், பெண்ணும், பெண்ணும் திருமணத்தில் இணையும் அவலநிலை நீதிமன்ற அனுமதியோடு பல நாடுகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன. நமது நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் பகவத் கீதையிலிருந்து எடுக்கப்பட்ட குறிக்கோள் சொல் (Motto) பதிவு செய்யப்பட்டுள்ளது. "Yato Dharma Lato Jeya" - Where there is Djarma there is victory (எங்கே தர்மமிருக்கிறதோ அங்கே வெற்றியுண்டு) தர்மமே வெல்லட்டும். அநேக சபைகள் இப்படிப்பட்டத் திருமணங்களை நடத்திக் கொடுக்கின்றன. எவ்வளவு பரிதாப நிலைக்கு வந்திருக்கிறது.

பாவச்சேற்றில் உழன்று கொண்டிருக்கும் உலகத்திற்கு இரட்சகர், மீட்பர் தேவை. அவர்தான் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து. அவரே இவ்வேளையின் தேவை (Need of the hour) ஜாதி, மத, இன, நிற, மொழி வேறுபாடின்றி பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, **என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்;** நானே தேவன், வேறொருவரும் இல்லை (ஏசா.45:22). ''என்னை நோக்கிப் பாருங்கள்'' என்ற ஓர் அன்பான ஓர் அழைப்பைக் கொடுக்கிறார். அழைப்பைக் கொடுத்தவர் நம்மை ஏமாற்றமாட்டார். மனம் மாறமாட்டார். ''இரட்சிக்கப்படுவீர்கள்'' என்று வாக்களிக்கிறார். வாருங்கள், இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். வாக்களித்தவர் உண்மையுள்ளவர், மாறாதவர். அவர் முதலாம் முறை இந்த உலகத்திற்கு இரட்சகராக வந்தார். இரட்சிப்பிற்கு அவரே வழி என்பதை நமக்குப் போதித்திருக்கிறார். அவர் இரண்டாம் முறை வரவிருக்கிறார். அவரை **இரட்சகராகச் சந்திக்கப் போகிறோமா? நியாயாதிபதியாகச் சந்திக்கப் போகிறோமா? என்பதே நமக்கு முன் பாக உள்ள கேள்வி.** ''அவர் வெளிப் படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்'' (1 யோவா.2:28). அவரைச் சந்திக்க ஆயத்தப்படுவோம். ●

# சிறிய கடிதம் - பெரிய செய்தி

இச்சிறிய கடிதத்தைப் பரிசுத்த பவுல் உரோமாபுரிச் சிறையில் இருந்து எழுதுகிறார். இந்த நிருபம் ஒரே அதிகாரத்தில் 25 வசனங்களையே கொண்டு படைக்கப் பட்டிருக்கிறது. பிலேமோன் என்ற விசுவாசிக்கு எழுதப்படுகிறது. ஒரு வேளை, அதிகம் வாசிக்கப்படாத ஒன்று என்று சொல்லலாம். ஆனால் இந்த நிருபத்தை ஆழ்ந்து வாசிக்கிறவர்கள், இதில் அடங்கியுள்ள, கிறிஸ்தவ வாழ்விற்கு ஒவ்வொரு நாளும் கைக்கொள்ள வேண்டிய அரிய பெரிய பாடங்களைக் கண்டு கொள்ள முடியும்.

ஒப்புரவாகுதல், மன்னிப்பின் மாண்பு, ஆத்தும பாரம், பரிந்து பேசுதல், கடவுளின் சித்தம் - இப்படி பல இயல்புகளை வெள்ளிடை மலையாய் விளக்கும், மிகச்சிறந்த மடலாக பிலேமோன் நிருபம் அமைந்திருக்கிறது. இந்நிருபத்தில் இடம்பெறும் மூன்று முக்கிய பாத்திரங்கள் - பரி. பவுல், பிலேமோன், ஒநேசிமு. இம்மூவர் மூலம் நமக்குக் கிடைக்கும் பாடம் என்ன? கீழே காண்போம்.

**ஒநேசிமு:** இந்த நிருபத்தின் மையமாக, இவன் விளங்குகிறான். இவன் பிலேமோனிடத்தில் அடிமையாகப் பணிபுரிந்தவன், அவனிடத்தில் திருடினவனாய், எஜமானின் தண்டனைக்குத் தப்பும்படி, மக்கள் கூட்டம் நிறைந்த, உரோமாபுரிக்கு ஓடி, ஒளிந்து கொள்கிறான். அக்காலத்தில் அடிமைகள் பொருளைப் போல, விலங்குகளைப் போல, வாங்கி விற்கப்பட்டார்கள் என்று அறிவோம். இப்போது பேசப்படுகிற மனிதாபிமானம் அப்போது நடைமுறையில் இல்லை. எஜமான் நினைத்தால், குற்றம் செய்த அடிமையை சிறைச்சேதம் கூட செய்யமுடியும். இந்தச் சூழலில், பயந்து, ஒளிந்து கொண்டு இருந்த ஒநேசிமு, பவுலைச் சந்தித்து, தேவகிருபையைப் பெற்று, சரீர விடுதலையையும், ஆத்தும விடுதலையையும் பெற்று இருக்கிறான்.

**பரி. பவுல்:** கிறிஸ்துவுக்காகச் சிறைக் கைதியாக உரோமாபுரியில் இருந்த பவுல், தன் சிறையிருப்பை மறந்து, ஒநேசிமின் சிறையிருப்பைத் திருப்பும் கிறிஸ்தவ நற்பணியை, வாஞ்சையாய்ச் செய்கிறார். பவுலுக்குச் சரீரப் பிரகாரமாக உதவி செய்ய ஆள் தேவை. ஒநேசிமுக்கு அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்ற, ஒரு நபர் தேவை. கடவுளின் சித்தம் இதை சாத்தியமாக்குகிறது. தன்னிடத்தில் வந்த ஒநேசிமுக்கு, இருப்பிடம், உணவு, உடை மட்டுமல்ல. அவனுக்கு வரவிருக்கும் தண்டனையிலிருந்து மீட்பதிலும், அவனுடைய ஆத்துமாவை இரட்சிப்பதிலும், ஆர்வமுள்ளவராய் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்கிறார். அடித்தளத்தில் புறக்கணிக்கப்பட்டவனாய் தன்னிடம் வந்த, ஒநேசிமை, தான்பெற்ற மகன் என்றும், அவன்

என் உள்ளம் போன்றவன் என்றும், அவன் இனிமேல், அடிமையான வன் அல்ல. அடிமைக்கு மேலானவன் என்றும், பிரியமுள்ள சகோதரன் என்றும் அவன் கடன்பட்டிருந்தால், தானே அவனுக்காகச் செலுத்தித் தீர்ப்பேன் என்றும், ஒநேசிமை ஏற்றுக்கொண்டால் என் ஆத்துமா இளைப்பாறும் என்றும், பிலேமோனுக்கு எழுதுகிறதை வாசிக்கும்போது, இது நம்மை ஆழ்ந்த வியப்புக்குள்ளாக்குகிறதல்லவா? மேலும், பவுலின் இந்த மனதுருக்க மான, அன்பான, பரிந்து பேசுதல், நமது இரட்சகராகிய கிறிஸ்து இயேசு நமக்காக நித்தமும் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறதையும், அவர் நமது எல்லா மீறுதலையும், அக்கிரமங்களையும் புறந்தள்ளி தம் பிள்ளைகளாக, நம்மை ஏற்றுக் கொண்டிருக்கிறதையும் நினைப்பூட்டுகிறதல்லவா? பரி.பவுல் ஒநேசிமை நடத்தின செயல் நம் ஒவ்வொருவருக்கும், மிகச்சிறந்த முன்மாதிரியாக அமைகிறதல்லவா?

புதிய ஏற்பாட்டில், கிறிஸ்து இயேசுவுக்கு அடுத்தபடி, முன்னிறுத்தப்படுகிற பரிசுத்த பவுல் ஓர் அடிமையைத் தனக்குச் சொந்தமாக ஏற்றுக் கிரயத்தைச் செலுத்த முற்படுவாரானால் பல குறைகளோடு வாழ்கிற நாம் பிறர் குற்றங்களை மன்னித்து, குறைகளைப் பொறுத்து, கிறிஸ்துவின் பண்புகளை பிரதி பலிப்பது எத்துணை அவசியம்?

“சுவிசேஷத்தை பிரசங்கிப்பது என்மேல் விழுந்த கடமை”, “சுவிசேஷத்தை பிரசங்கிக்காவிட்டால் எனக்கு ஐயோ” (1 கொரி.9:16), சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும்...கடிந்து கொண்டு புத்தி சொல்லு. (2 தீமோ.4:2) போன்ற வார்த்தைகளைக் கூறுகிறவராய் மட்டுமல்ல - நடைமுறை வாழ்க்கையிலும் அதைச் செயல்படுத்தியிருப்பது, நமக்கு ஒருமுன் உதாரணமாக அமையட்டும்.

**பிலேமோன்:** இவர் பரி, பவுலுக்கு உடன் வேலைக்காரர். ஒரு நல்ல விசுவாசி. பரிசுத்தவான்களின் உள்ளங்களை இளைப்பாறச் செய்தவர். கொலோசெ பட்டணத்தில், வீட்டு ஆலயத்தில் (அந்த நாட்களில் ஆலயங்கள் வீட்டில்தான் செயல்பட்டன) பேராயர் போன்ற அந்தஸ்தில் இருந்தவர். பெரிய செல்வந்தராயிருந்த இவரிடத்தில் பல அடிமைகள் வேலை செய்தார்கள். ஒநேசிமு அவர்களில் ஒருவன். ஒநேசிமு, பிலேமோனின் ஆளுகையிலிருந்து தப்பி ஓடி, அவருக்குத் தெரியாமல், பரி.பவுலிடம் பணிசெய்தான். நேர்மையான கிறிஸ்தவராக ஒநேசிமு தன்னிடம் வேலை செய்யும், செய்தியை பிலேமோனிடம் பகிர்கிறார். இதைக் கேள்விப்பட்ட, பிலேமோன் பெரிய மனக்குழப்பத்திற்குள்ளாகிறார். அவருக்கு முன் தோன்றிய இரண்டு எதிர்முரணான கேள்விகள் 1) ஒநேசிமுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் 2) அல்லது மன்னித்து விட்டுவிட வேண்டும். மன்னித்து விட்டுவிட்டால், அவர்

இரண்டு பிரச்சனைகளை எதிர் நோக்க நேரிடும் 1) இவனுடன் பணி புரிந்த மற்ற அடிமைகளைக் கட்டுப் பாட்டுடன் வைப்பது சிரமமாகி விடும். 2) மற்ற எஜமான்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி யிருக்கும். இதை எப்படி மேற் கொள்வது? மாறாக, மன்னிக்கத் தவறினால், தான் கிறிஸ்துவின் மன்னிப்பை பெற்றவன், ஒரு பலத்த விசுவாசி என்று சொல்லிக் கொள் வதில் எந்த அர்த்தமும் இருக்காது. இந்தச் சூழ்நிலையில், பரி. பவுல் ஒநேசிமை ஏற்றுக்கொண்டிருப் பதும் அவனைக் கரிசனையோடு நடத்துகிறதும் பவுலின் பரிந்துரை யும், அவனைச் சிந்திக்க வைக் கிறது. மேலும் தான் கிறிஸ்துவின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட வராக மன்னிப்பைப் பெற்றவராக பிலேமோன் ஆண்டவருக்கு ஏற் புடைய முடிவை எடுக்கும்படி ஆவி யானவரால், ஆட்கொள்ளப்படு கிறார். ஒநேசிமை மன்னித்து, அவ னுக்கு விடுதலை அளிக்கிறார். அன்றையக் காலக் கட்டத்தில் கலாச்சாரச் சூழ்நிலையில், பிலே மோன் எடுத்த முடிவு வியக்கத் தகுந்த அருஞ்செயல் என்றால், அது மிகையாகாது.

ஒப்புரவாகுதலின் அவசியத்தை உணர்த்துவதற்குப் பல முயற்சி களை பவுல் எடுத்தார் என்றாலும் அதை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டதாலேயே, பிலேமோன், ஒநேசிமை மன்னித்து ஏற்றுக் கொள்ள முடிந்தது என்பதும் நமக்கு நல்ல பாடமாக அமையக் காண் கிறோம்.

**நமது சிந்தனைக்கு:**

* ஒநேசிமு பரி.பவுலை சந்திக்காது போயிருந்தால்?

* பவுல், தனக்குத் தேவையான உடல் உதவிகள் மட்டும் பெற்றுக் கொண்டு, ஒநேசிமுடைய சரீர, ஆத்தும விடுதலை பற்றிக் கவலைப் படாதிருந்திருந்தால்?

* ஒநேசிமுக்காக, பவுல் பிலேமோ னிடம் பரிந்து பேசாதிருந்திருந்தால்?

**நமது சுய ஆய்வுக்கு நம்மை உட் படுத்தப்படவேண்டிய கேள்விகள்**

* பவுல், ஒநேசிமை நடத்தியது போல, நமது அலுவலக / வீட்டு உதவி யாளர்களை நாம் நடத்துகிறோமா?

* அவர்களைக்குறித்த, சரீர, ஆத்தும பாரம், நமக்குண்டா?

* பிலேமோன் போல, சூழ்நிலை, எதுவாயினும், மன்னிக்கும் சுபாவம், நம்மில் காணமுடிகிறதா?

* பிறரோடு, ஒப்புரவாகுதலின் அவசியத்தை, உணர்ந்து வாழ் கிறோமா?

சீர்திருத்தச் சபையை உருவாக்கிய மார்ட்டின் லூதர் “நாம் அனை வருமே ஒநேசிமுக்கள் தான்” (All of us are Onesimuses) எனப் பவுலின் இந்தக் கடிதத்தைக் குறித்துக் கருத் துரையில் சொல்லியுள்ளார். ஏன் அப்படிக் குறிப்பிட்டார்? செல்வந்தரும் குடும்பமாகத் தேவஊழியம் செய்த வருமான பிலேமோன் என்ற எஜமா னுக்குத் துரோகம் செய்து தப்பி ஓடிய

ஓர் அடிமை ஒநேசிமு, உரோம் நகரில் இயேசுவுக்கு ஊழியம் செய்த தின் நிமித்தமாகச் சிறையிருப்பி லிருந்த பவுலிடம் போய்ச் சார்ந்து கொண்ட அடிமை. அடிமைத் தனத்தின் அழுத்தத்தை அதிகமாக அவனிடமிருந்து பவுல் அறிந்திருக்க வேண்டும். முதலாம் நூற்றாண்டில் உரோம சாம்ராஜ்யத்தில் 60 மில்லி யன் அடிமைகள் இருந்ததாகச் சொல் லப்படுகிறது. அடிமைகளைக் குறித்த பாரம் இப்பொழுது பவுலை அழுத்தி யிருக்கவேண்டும். **அடிமையும் எஜ மானும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கும்போது இந்த அடிமையும் எஜமானும் சகோ தரர்கள் தானே.** இப்பொழுது பிலே மோனுக்குக் கடிதம் எழுதுகிறார். **அடிமையையும் எஜமானையும் சகோதரர்களாக்கி சமூக மாற்றத்தை உருவாக்கப் பவுல் வித்திட்டிருக் கிறார் என்றால் அது மிகையாகாது.** இந்த வித்து வேரூன்றி, வளர்ந்து பர வட்டும். சகோதரத்துவம் நம்மில் உரு வாகட்டும். "இதோ, சகோதரர் ஒரு மித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமு மானது?" (சங்.133:1). ஆமென். ●

- Dr. J. JOHNSHON SUNDARARAJ, Ph.D., Former Vice Principal American College. Mo: 98436-80054

## ஏன் இந்தப்பாடுகள்?

**சில வேத அறிஞர்கள், யோபு புத்தகம்தான் வேதப் புத்தகத்தில் பழமையான புத்தகம் என்று எண்ணுகின்றனர். இது உண்மையோ, இல்லையோ, இந்தப் புத்தகம், மனித இனத்தின் பழமையான கேள்வியோடு சம்பந்தப்படுகிறது. ஏன் கடவுள் பாடுகளை அனுமதிக்கிறார்?**

**இது ஓர் எளிதான விஷயம் அல்ல. இது ஆண்டவரைக் குறித்து நம் மனதில் எழும் ஆழமான ஒரு கேள்வி. ஓர் அன்புள்ள, கிருபையுள்ள ஆண்டவர் எப்படிப் பாடுகளை அனுமதிப்பார்? வேறுவிதமாகச் சொன்னால், ஆண்டவர் நம்மைப் பாடுபட அனுமதிப்பாரென்றால், அவர் கட்டாயம் நம்மை நேசிக்கவில்லை. ஆனால் இது தவறான முடிவாகும். ஆண்டவர் நம்மை நேசிக்கிறார். இதற்கு ஆதாரம் தன் குமாரன் இயேசுவை நமக்காகச் சிலுவையில் பாடுபட அனுமதித்தார். பிறகு, இந்தப் பழமையான கேள்விக்கு பதில்தான் என்ன? ஆண்டவரின் பண்புகளை அறிந்து கொள்ளத்தான். இதைத்தான் யோபு கண்டுபிடித்தார். ஆண்டவர், யோபுவுக்கு, ஏன் பாடுகளை அனுமதித்தார் என்பத தற்கான, புரிந்து கொள்ளக்கூடிய அல்லது முழுமையான பதிலைக் கொடுக்க வில்லை. ஆனால் தன்னுடைய அனுபவங்களால் ஆண்டவர் நம்பத்தகுந்தவர் என்ற முடிவுக்கு யோபு வருகிறார். ஏனெனில், அவர் அன்புள்ளவர், இரக்க முள்ளவர். எனவே, நாமும் அவரை நம்ப முடியும். அவர் நம் எல்லாக் கேள்வி களுக்கும் பதில் கொடுக்காததால் அல்ல. அவர் ஆண்டவராக இருப்பதால் நாம் அவரை நம்ப முடியும்.** **- பில்லிகிரகாம்**

**"நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்" (சங்.119:71)** ●

# கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்

- பாகம் 13

## சந்தேகக் கோட்டையும் விரக்தி என்ற அரக்கனும்

உலக ஐசுவரியம் என்ற கண்ணிக்குத் தப்பிய கிறிஸ்தியானும் நன்னம்பிக்கையும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அவர்கள் ஒரு நதியை ஒட்டிய பாதையின் வழியாகப் பயணித்தார்கள். அந்த நதி தேவனுடைய நகரத்தை மகிழ்விக்கிற நதியாக இருந்தது. நதியின் இருகரையிலும் கனிதரும் மரங்கள் இருந்தன. அதன் இலைகள் நோய்களைக் குணமாக்கும் தன்மையுள்ள வைகளாக இருந்தன. அந்த அருமையான காட்சியைக் கண்டு மகிழ்ச்சியின் நிறைவோடும் அங்குள்ள கனிகளின் நறுமணத்தின் வாசனையை அனுப வித்துக் கொண்டே சென்றனர். பசுமையான புல்வெளிக்கு பலவண்ணப் பூக்கள் பாதையின் அழகுக்கு மெருகேற்றின. வேறுவிதமாகச் சொன்னால் அவர்கள் இராஜபாதையில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அந்தப் புல்வெளிக்கு அருகாமையில் கரடுமுரடான கல்ரோடும் இருந்தது. ஆனால் புல்தரையில் செல்வது கால் பாதங்களுக்கு இதமாக இருந்தபடியால் அவர்கள் கல்லான பாதையைத் தெரிந்து கொள்ளவில்லை. இரண்டு பாதைக்கும் மத்தியில் ஒரு வேலியும் அமைக்கப்பட்டிருந்தது.

கிறிஸ்தியான், நன்னம்பிக்கையிடம் அருகில் அமைந்திருக்கும் கரடு முரடான பாதை இந்தப் புல்வெளியான பாதைக்கு ஒரு மாற்று வழியாகத் தான் தோன்றுகிறது என்று சொன்னான். புல்தரை வழியைத் தாண்டி மறு பக்கம் செல்ல நடுவே வேலியில் ஓர் இடத்தில் வேலியைத்தாண்டி மறுபக்கம் செல்ல ஏணி அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் நன்னம்பிக்கை இந்தப் புல்தரை யான இராஜபாதையிலே நடந்து செல்லலாம் என்று ஆலோசனை கூறினான்.

ஆனாலும் கிறிஸ்தியான் கரடுமுரடான அந்தப் பாதையிலே செல்ல வலி யுறுத்தியதினால் ஏணியில் ஏறி மறுபக்கம் இறங்கினார்கள். அந்த வழி அவர் களுக்குக் கடினமாகவே தோன்றிற்று. சற்றுதூரம் கடந்து சென்றபோது அங்கு மொரு புல்வெளிப்பாதை இணையாகச் செல்வதைக் கண்டார்கள். கிறிஸ்தி யான், அந்த புல்வெளிப் பாதையில் செல்ல ஆலோசனை சொன்னதை ஏற்று காலுக்கு இதமான புல்வெளியில் சென்றனர். சற்றுதூரம் சென்ற பின் தங் களுக்கு முன்பாக ஒருவன் செல்வதைக் கண்டார்கள். இருவரும் அவனை சந்தித்து விசாரித்தார்கள். அவன் பெயர் **வீண்நம்பிக்கை** (Vain Confidence) அவன் மோட்சப்பட்டணம் செல்ல இதுதான் சரியான வழி என்று சொன்னான். இருட்ட ஆரம்பித்தது. திடீரென்று தடால் எனப் ஒரு பெருஞ்சத்தம் கேட்டது. வீண் நம்பிக்கை அருகிலிருந்த பெரும் பள்ளத்தில் விழுந்துவிட்டான். அவன் அலற ஆரம்பித்தான். அதை உற்று நோக்கினால் அது செங்குத்தாக அமைந்த ஒரு குழி. வீண் நம்பிக்கையின் முணங்கும் குரல் மட்டும் கேட்டது. கிறிஸ்தி யான் இராஜபாதையை விட்டுத் தவறான பாதைக்கு வந்துவிட்டோம் என்று தன் தவறை உணர்ந்தான். மீண்டும் இராஜபாதைக்குத் திரும்பினர்.

பெருமழை காரணமாக வழி சரியாகத் தெரியவில்லை. பெரும்பாறைகளுக்கு இடையே ஒரு குகை தெரிந்தது. பெருவெள்ளத்திற்குத் தப்ப அந்தக் குகையில் அடைக்கலம் புகுந்தனர். நடந்து வந்த களைப்பில் அயர்ந்து தூங்கிவிட்டனர்.

### விரக்தி எனும் அரக்கன்

அந்தக் குகைப் பகுதிக்கு **விரக்தி எனும் அரக்கன்** (Giant Despair) உரிமையாளர் போலும். அதிகாலை வேளையில் அவனது இடத்தைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வரும்போது குகையில் இருவர் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு கொண்டான். அவன் அவர்கள் இருவரையும் எழுப்பி தன்னுடைய இடத்திற்குள் அத்துமீறி புகுந்துவிட்டனர் என்று தண்டிப்பதற்கு அவனது கோட்டைக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றான். அவர்கள் மோட்சப் பயணிகள் என்பதை அறிந்துகொண்டான். அவர்கள் இருவரையும் **சந்தேகக் கோட்டையில்** (Doubting Castle) சிறைக்கைதிகளாக வைத்தான். அவர்களுக்கு உணவோ, தண்ணீரோ கொடுக்கப்படவில்லை. அந்த அரக்கன் **அவிசுவாசம்** (Diffideance) என்ற தன் மனைவியிடம் மோட்சப்பயணிகளைக் குறித்து அனைத்துக் காரியங்களையும் அவளுக்குச் சொன்னான். அவள் அவர்கள் இருவரையும் கடுமையாக அடித்து துன்புறுத்தும்படி தன் கணவனுக்கு ஆலோசனை கூறினாள். மறுநாள் இரவு அரக்கனின் மனைவி அரக்கனிடம் அந்த இரண்டுபேரும் இன்னும் சாகவில்லையா என்று கேட்டாள். அவர்கள் உயிரோடிருக்கிறார்கள் என்பதை அறிந்து, கணவனிடம் அவர்கள் இருவரும் சித்திரவதையால் சாவதை விட கயிற்றில் தொங்கியோ, விஷம் குடித்தோ கத்தியால் குத்திக்கொண்டோ தற்கொலை செய்து கொள்ளும்படிச் சொல்லச் சொன்னாள். அரக்கன் அப்படியே அவர்களிடத்தில் சொன்னான்.

இது கிறிஸ்தியானின் மனதை வெகுவாய்ப் பாதித்தது. அவனது மனது தற்கொலை ஆலோசனைக்கு இடம் கொடுத்துவிட்டது. தினம் தினம் இந்தப் பாதாளச் சிறையில் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதையால் சாவதை விட சவக்குழியே மேல் என்று எண்ணினான். ஆனால் நன்னம்பிக்கை கொடிய சித்திரவதையின் மத்தியிலும் மிகவும் திடமாகத் தெளிவாக இருந்தாள். இந்தப் பாதாளச் சிறை, நரக வேதனையாக இருந்தாலும் தற்கொலை செய்து நித்திய நரகத்திற்குச் செல்வதை விட இதைச் சகித்துக் கொள்வதே மேல் என்ற தீர்மானத்தில் வைராக்கியமாக இருந்தான். கிறிஸ்தியான் அப்படிச் செய்வானானால் அவன் தன்னையே அழித்துக் கொள்ளுகிறான். அவன் கொலையாளி என்ற குற்றத்தோடு நரகத்தைச் சென்றடைவான். மறுநாள் அரக்கன் வந்தபோது இருவருமே உயிரோடிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அரக்கன், தன் மனைவியின் ஆலோசனையின்படி அவர்கள் இருவரையும் கோட்டையின் பின்பகுதியில் கொல்லப்பட்ட சில மோட்சப்பிரயாணிகளின் சவக்குழிகளையும் உலர்ந்து கிடக்கும் மனித எலும்புகளையும் மண்டையோடுகளையும் அவர்கள் காணும்படி அழைத்துச் சென்றான். அவற்றையெல்லாம் காட்டிவிட்டு மீண்டும்

பாதாளச் சிறை அறைக்குக் கொண்டு வந்து அவர்களைச் சித்திரவதை செய்தான். அரக்கன் வெளியே சென்றபின் கிறிஸ்தியானுக்கு தற்கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் மீண்டும் தலைதூக்கியது. நன்னம்பிக்கை, கிறிஸ்தியானின் உண்மையான நண்பனாக மீண்டும் அவனுக்கு அறிவுரை கூறினான். எத்தனையோ கொடிய சோதனைகளையெல்லாம் தாண்டி வந்த நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டிச் சோதனைகளையும் வேதனைகளையும் சகித்துக்கொள்ளத் தைரியப்படுத்தினான்.

**வாக்குத்தத்தம் எனும் திறவுகோல்**

நன்னம்பிக்கையின் ஆலோசனை கிறிஸ்தியானின் இருதயத்தில் சிறிதளவு நம்பிக்கையின் ஒளியைக் கொடுத்தது. அது இரவுவேளை. இருவரும் அமர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது கிறிஸ்தியான் "என்னிடம் **வாக்குத்தத்தம் எனும் திறவுகோல்** (Key of Promise) உள்ளது. நான் இதுவரை அதை மறந்தே போய்விட்டேன்" என்றான். அத்திறவுகோலைக் குறித்து இருவரும் மகிழ்ச்சியடைந்தனர். இதைக்கொண்டு நிச்சயமாக இந்தப் பாதாளச் சிறையிலிருந்து தப்பிவிடலாம் என்ற நம்பிக்கை வந்தது. அவர்கள் அதைச் செயல்படுத்திப் பாதாளச் சிறையைத் திறந்து வெளியே வந்தனர். வெளி வாசல் கதவையும் திறந்துவிட்டனர். கோட்டையின் கதவைத் திறக்கும்போது அதினால் ஏற்பட்ட சத்தம் அரக்கனுக்கு எட்டியது. அவன் தப்பிச் செல்லும் கிறிஸ்தியானையும் நன்னம்பிக்கையையும் மடக்கிப் பிடிக்க அவர்களை நோக்கி விரைந்தான். அவன் அப்படி ஓடிவருகையில் அவனுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு (Fits) தரையில் விழுந்தான். அவனால் எழும்ப முடிய வில்லை. அவர்கள் ஓடி மீண்டும் வேலியிலிருந்த ஏணியில் ஏறித் தாண்டி இராஜபாதைக்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் அங்கிருந்த ஒரு பாறாங்கல்லில் ஓர் எச்சரிக்கையின் செய்தியைப் பதிவு செய்து வைத்தனர். "வேலியில் அமைந்திருக்கும் ஏணிப்பாதை விரக்தி எனும் அரக்கனுடைய சந்தேகக் கோட்டைக்குச் செல்லும்பாதை. அந்த அரக்கன் பரலோக இராஜ்ஜியத்தின் இராஜாவை அற்பமாக எண்ணிப் பரலோகப் பயணிகளை முற்றிலும் அழிப்பவன்". அச்செய்தி பின்வரும் மோட்சப் பிரயாணிகளுக்கு எச்சரிக்கை யாக அமையும்.

**நாம் கற்றுக் கொள்வது: 1.விரக்தி:** கிறிஸ்தியானின் மோட்சப் பயணத்தில் இந்தப் பகுதி இன்றைய சந்ததிக்கும் பொருந்துவதாகவே உள்ளது. எந்தச் சந்ததியினருக்கும் இல்லாத அளவுக்கு இன்றைய சந்ததி யினரை விரக்தி ஆட்கொண்டிருக்கிறது. விரக்தி மனச்சோர்வாக மாறி அது தற்கொலைக்கு வழிநடத்துவதாக இருக்கிறது. பூர்வ காலத்திலும் கூட விரக்தி யால் ஆட்கொள்ளப்பட்ட சில பரிசுத்தவான்களைக் கூட சாத்தான் மனச் சோர்வுக்கு இடங்கொடுக்க அதை ஆயுதமாகப் பயன்படுத்தியிருக்கிறான். விசுவாசிகள், நேருக்கு நேர் அப்பல்லியோனைச் சந்தித்தது போன்ற சந்தர்ப்பம் வந்தால் மேற்கொண்டு விடுவார்கள். ஆனால் நாம் அசதியாயிருந்

தோமானால் விரக்தி உட்புகுந்துவிடும். அதுதான் கிறிஸ்தியானுக்கும் நன்னம்பிக்கைக்கும் ஏற்பட்டது. விரக்தி அவர்கள் ஆத்துமாவைப் பாதித்து விட்டது போல நம்மிலும் அது பாதிப்பை உண்டாக்கும். அது சுயபரிதா பத்தையும் வாழ்வில் சலிப்பையும் கொண்டுவரும்.

பொதுவாக நம்முடைய வாழ்க்கையில் நமக்கு ஏற்பட்ட தோல்விகளையே தொடர்ந்து சிந்தித்து துக்கப்படுகிறோம். அப்படிப்பட்ட வேளைகளிலெல்லாம் நம்முடைய எண்ணங்களையும் கண்ணோட்டங்களையும் மாற்றிக் கொள்ள உதவி செய்யக்கூடிய நல்ல விசுவாசிகளின் ஐக்கியம் தேவை. கிறிஸ்தி யானுடைய விசுவாசமுள்ள மோட்சப்பயணத்தில் அநேக யுத்தக்களங்களைச் சந்தித்துத் தாண்டி வந்தாலும் அவனையும் விரக்தி ஆட்கொண்டு தன்னையே அழித்துக் கொள்ளும் எண்ணத்திற்குக் கொண்டு சென்றுவிட்டது. ஆனால் நன்னம்பிக்கையைக் குறித்துச் சிந்தித்தால் அவன் ஒரு புதிய விசுவாசியாக இருந்தாலும், விரக்தியால் பாதிக்கப்பட்டாலும் அதிலே அவன் மூழ்கிப் போகாமல் காத்துக் கொண்டான். தன்னைக் காத்துக் கொண்டது மாத்திரமல்ல, கிறிஸ்தியானையும் அவன் தற்கொலைக்குச் சென்றுவிடாமல் தன்னைக் காத்துக் கொண்டான்.

**2. தற்கொலை:** விரக்தி போலவே தற்கொலையும் சாத்தான் பயன்படுத்தும், அழிவை உண்டாக்கும் ஓர் ஆயுதமாகும். பொதுவாக சிலர் தற்கொலை ஒரு பிரச்சனையின் தீர்வு என்று நினைக்கிறார்கள். ஆனால் நன்னம்பிக்கை கிறிஸ்தியானுக்கு ஆலோசனை சொன்னதுபோல தற்கொலை நரகத்தில் சென்று முடியும். அதற்கு அவன் சொன்ன காரணத்தைப் பாருங்கள். தன்னுடைய வாழ்வைத் தானே அழித்துக் கொள்கிறவன் ஒரு கொலையாளி (Murderer). ஏனெனில் மனித வாழ்வு ஆண்டவர் நமக்குத் தந்த நல்ல ஈவு. அதை அழித்துக் கொள்ள அவனுக்கு உரிமையில்லை. ஆகவே ஒரு கொலை யாளியின் ஆத்துமா நரகத்தையே சென்றடையும். ஏற்றவேளையில் நன் நம்பிக்கையின் ஆலோசனை கிறிஸ்தியானுக்குக் கிடைத்தது அவனைத் தற் கொலை எண்ணத்திலிருந்து மீட்டெடுத்தது. நம்முடைய வாழ்வு நம்முடைய சிந்தனையின்படி அல்ல. ஆண்டவருடைய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். எலியா, தேவனுடைய வல்லமையான தீர்க்கதரிசிதான். யேச பேலின் மரண அச்சுறுத்தலுக்குப் பயந்து தன் உயிரை எடுத்துக்கொள்ளும் என்று ஜெபித்தான். ஆனால் ஆண்டவர் அவனை ஆறுதல்படுத்தி, எண் ணத்தை மாற்ற தேவதூதனை அனுப்பினார். ஆண்டவர், ஒவ்வொரு வரையும் குறித்து அருமையான திட்டத்தை வைத்திருக்கிறார். அவருடைய நோக்கம் நம்முடைய எல்லா முயற்சிகளையும் விட மேலானது. நம்மில் விசுவாசத்தைத் தொடங்கியவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவையே நோக்கி இந்தப் பந்தயக்களத்தில் ஓடுவோம். பரலோகப் பயணத்தில் நமது இலக்கைச் சென்றடைய ஆண்டவர் உதவி செய்வாராக.

**– நன்றி: சகோதரி. லாரா டிலனோ, lauradelano@yahoo.com ●**

## வாசகர்கள் கவனத்திற்குப்...

இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் நம்மால் வெளியில் சென்று புத்தகங் களை வாங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே நாமும் கிறிஸ்தவ விசுவாசிகளின் நலன்கருதி புதியதாக வலைதளம் அமைத்து அதன் வழியாக புத்தகங்கள் மற்றும் நமது புத்தகக் கடைகளில் கிடைக்கும் அனைத்து பொருட் களையும் இணையதளம் வழியாக விநியோகிக்கின்றோம். எங்களது வெப்சைட்

**www.wordofchrist.org**

என்ற இணையதளத்தில் ஆர்டர் செய்யலாம்.

மேலும் விபரங்களுக்கு : 044-26613242 / 42640111 / 8754584449

**"ஆண்டவர் வசனம் தந்தார்; அதைப் பிரசித்திப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி" (சங்.68:11).**



என் தேச எல்லையெங்கும் அப்பா நீ ஆள வேண்டும் (2)
வறுமை எல்லாம் மாறணும்
தேசத்தின் வறுமை எல்லாம் மாறணும்
வன்முறை எல்லாம் ஒழியணும் (2) எஜமானனே, என் இயேசு ராஜனே...

- தந்தை பெர்க்மான்ஸ்




**"ஊழலின் ஊற்றுக்கண் வருவாய்த்துறை"**
**"லஞ்சம் வாங்குவது பிச்சை எடுப்பதற்குச் சமம்"**
**- உயர்நீதிமன்றம் - மதுரை கிளை**

**அனைத்து அரசு அலுவலகங்களிலும் இந்த எச்சரிக்கைப் பலகையை வைப்பது நல்லது. எவரேனும் திருந்த வாய்ப்பாக இருக்குமே.**

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 06366826622

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**

Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805